கோகுலம்

10-9-1978 விலை 60 காசு



கோகுலம் கேமல்

வண்ணப்போட்டி

நுழைவுக் கட்டணம் கிடையாது

புள்ளியிட்ட இடங்களில் வெட்டவும்.

பரிசுகள் வென்றிடுவீர்

கேமல்—முதல் பரிசு ரூ. 15
கேமல்—2வது பரிசு ரூ. 10
கேமல்—3வது பரிசு ரூ. 5
கேமல்—5 ஆறுதல் பரிசுகள்
கோகுலம்—5 ஆறுதல் பரிசுகள்
கேமல்—10 சான்றிதழ்கள்



12 வயதுக்குட்பட்ட மாணவ மாணவியர் மட்டுமே பங்கெடுக்க முடியும். மேலுள்ள படத்தை ஏதேனும் கேமல் வண்ணம் உபயோகித்து வண்ணம் தீட்டவும். வண்ணந்தீட்டிய படங்களை இம் முகவரிக்கு அனுப்பவும்: ஆசிரியர், கோகுலம் 84/1–ஸி, ரேஸ் கோர்ஸ் ரோடு, கிண்டி, சென்னை-600 032.

முடிவுகள் தீர்ப்பானது. இதுபற்றிய கடிதத் தொடர்பு வரவேற்கப்பட மாட்டாது.

பெயர் _

வயது _

முகவரி _

நுழைவுகளை இத் தேதிக்கு முன் அனுப்பவும் 30-9-1978

புள்ளியிட்ட இடங்களில் வெட்டவும்.

மலர் - 6 இதழ் - 14
செப்டம்பர் 10, 1978.
காளயுக்தி — ஆவணி 25

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் — பாரதியார்

கோகுலம்
சந்தா விவரம்
இந்தியா:
ஒரு வருடம் — ஆறு மாதம்
ரூ. 15-00 — ரூ. 7-50
வெளி நாடுகள்:
ஒரு வருடம் ரூ. 40-00

கசந்த வாழ்விலே மலர்ந்த மேதை

ஆயிரத்து ஓர் இரவுகளில் சொன்ன அராபிக் கதைகளின் அதிசயத்தையும் ஆச்சரியத்தையும் போல நம் காலத்திலே வாழ்ந்து மறைந்த ஒரு தீர்க்கதரிசியின் வாழ்க்கைக்கதை அமைந்திருந்தது. அவர் இறப்பதற்கு இருபது வருஷங்களுக்கு முன்னதாகவே மக்கள் அவருடைய பெருமையை உணர்ந்து போற்றிப் புகழ்ந்து பாராட்டினார்கள். புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் செல்வது போல் முடிவற்ற சங்கிலித் தொடர் போல அலைஅலையாக ரசிகர் கூட்டம், அவரைத் தரிசிக்க, அவரது முகத்தைக் காண, அவரது குரலைக் கேட்க, அவரது உடைகளின் ஓர் ஓரத்தையாவது தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ள, அவரது வீட்டை முற்றுகை இட்டது.

நண்பர்கள் அவர் வீட்டில் வருஷக் கணக்கில் தங்கி இருந்து அவர் வாயிலிருந்து உதிரும் ஒவ்வொரு வார்த்தையையும் சாதாரணச் சம்பாஷணைகளையும் கூட சுருக்கெழுத்துக்களில் எழுதிக் கொண்டார்கள். அவரது தினசரி வாழ்வின் ஒவ்வொரு சிறு அம்சத்தையும் அசைவையும் ஒன்று விடாமல் குறித்து கொண்டார்கள். பிறகு அவைகளை ஒன்று திரட்டிப் பெரிய பெரிய புத்தகங்களாக வெளியிட்டார்கள்.

இந்த அதிசய மனிதரைப் பற்றி, இவரது கருத்துக்களைப்பற்றி 23,000 புத்தகங்கள் — 2,300 இல்லை! — 23,000 புத்தகங்களும்; 56,000 (செய்தித் தாள், சஞ்சிகைகளுக்கு) கட்டுரைகளும் எழுதி வெளியிடப் பட்டிருக்கிறது. இவர் தாமே எழுதிய எழுத்துக்கள் மாத்திரம் 100 வால்யூம்கள் அடங்கும். உலகில் எந்த மனிதனும் இதுவரை எழுதாத அளவு அத்தனை எழுதிக் குவித்திருக்கிறார்.

இவர் எழுதிய நாவல்களில் வரும் பாத்திரங்களைப் போலவே இவரது வாழ்வும் பகட்டாக, படாடோபமாக, அந்தஸ்தாக இருந்தது. நாற்பத்திரண்டு அறைகளை உடைய அரண்மனை போன்ற பங்களாவிலே பிறந்தார். அவரைச் சுற்றிச் செல்வம் சிதறிக் கிடந்தது. பரம்பரையான செல்வமும் செல்வாக்கும் படைத்த கௌரவமுள்ள குடும்பத் தொட்டிலிலே சொகுசாகத் தாலாட்டுப் பாடி வளர்க்கப்பட்டவர். இப்படிப்பட்டவர் தன் வாழ்நாளின் கடைசிப் பகுதியில் தன் சொத்து, சுகம், நிலபுலன் இவைகளை எல்லாம் தான தருமம் செய்தார். உலக சுகங்களை உதறித் தள்ளினார். ஒரு தனிமையான ரயில்வே ஸ்டேஷனில் ஏழைக் குடியானவர்கள் சூழ்ந்திருக்க, யாருமற்ற அனாதையைப் போல செப்புக் காசும் இல்லாத நிலையில் செத்துக் கிடந்தார். இவர் இளமைப் பருவத்தைக் கேவலமாக, மகா மட்டமாகக் கழித்தார். தலைநகரில் உள்ள மிகப்பிரபலமான உடை தயாரிக்கும் கடையில் தன் செல்வத்தின் ஒரு பகுதியைச் செலவிட்டு வண்ண வண்ண உடைகளை விதவிதமான முறைகளிலே தயாரிக்கச் சொல்லி அவைகளை



அணிந்து கொண்டு உல்லாச நடை போட்டார். ஆனால் வாழ்வின் பிற்பகுதியிலோ ஏழைக் குடியானவர்களைப் போல மோசமான முரட்டு ஆடை அணிந்து கொண்டார். தன் பூட்ஸ்களைத் தன் கைகளாலேயே தைத்துத் தயாரித்துக் கொண்டார். தன் படுக்கையைத் தானே தட்டிப் போட்டுக் கொண்டார். தன் அறையைத்தானே சுத்தம் செய்து கொண்டார். விரிப்பில்லாத வெறும் மேஜையிலே, வெள்ளிக் கிண்ணங்களுக்குப் பதில் மரக் கப்பரைகளில், மர ஆப்பைகளினால் தானே தயாரித்த மிக எளிய உணவை உண்டு வாழ்ந்தார்!

குடி, கொலை, சண்டை, வேசி இன்னும் மனதினால் நினைக்க முடியாத கொடுமைகளை எல்லாம் செய்து அசிங்கமான, பாபகரமான வாழ்க்கையை இளமையிலே நடத்திய இவர், பிற்காலத்தில் நாடே புகழும் நல்லவராக ஏசு கிறிஸ்துவின் போதனைகளின்படி வாழ்க்கை நடத்தும் ஞானியாக மாறிப் போனார்.

மணமான புதிதில் மனைவியிடம் மது உண்ட வண்டுபோல மயங்கிக் கிடந்தார். தங்களது இந்த இன்பம் நிறைந்த வாழ்க்கை என்றும் நிலைத்து இருக்க வேண்டும் என்று தம்பதிகள் இருவரும் இறைவனின் முன்பு மண்டியிட்டு மன்றாடி வேண்டிக் கொண்டது ஒரு காலம். பின்னால் அவளுடன் வாழும் வாழ்க்கையே வேம்பாக, விளக்கெண்ணெயாக நினைத்து வேதனைப் பட்டார். அவளைப் பார்க்கவே கூசினார். அவரது கடைசிப் பிரார்த்தனை, மனைவியைத் தன் மரணப் படுக்கையினருகில் கூட வர விடக்கூடாது என்பதுதான்.

இளமையிலே கல்லூரிப் படிப்பில் தோல்வி கண்டவர். ஆசிரியர்கள் 'இவன் கனமான மண்டையோட்டினுள் மூளை என்பதே இல்லை. களிமண்தான் அடைத்து வைக்கப் பட்டிருக்கிறது' என்று ஏளனமாகப் பேசி ஏசினர். முப்பது வருஷங்களுக்குப் பிறகு அதே மூளையிலிருந்து உலகம் இதுவரை கண்டிராத, பல நூற்றாண்டுகள் நின்று நிலை பெற்று வாழும் அமர சிருஷ்டிகளான இரு பெரும் நவீனங்கள் உதயமாயின.

இளமை வாழ்வின் தாழ்வுக்கும் முதுமை வாழ்வின் உயர்வுக்கும் இடையே வாழ்ந்த இந்தப் பெரியார், ஞானி, தீர்க்கதரிசி, சிந்தனையாளர், நாவலாசிரியர், சிறுகதை மன்னர் யார்?

அண்ணல் காந்தியின் குரு, ஆத்ம ஞானி — லியோ டால்ஸ்டாய். இலக்கிய வானிலே என்றும் நின்று சுடர்விட்டுப் பிரகாசிக்கும் 'யுத்தமும் சமாதானமும்' 'அன்னா கரீனினா' என்ற ஒப்பற்ற நவீனங்களைச் சிருஷ்டித்து உலகுக்குத் தந்தவர்.

ரஷ்ய நாட்டு மாணிக்கமானாலும் இன்று உலகிலுள்ள மானிட இனம் பூராவும் போற்றிப் பாராட்டும் பெருமை பெற்றவராகி விட்டார் டால்ஸ்டாய். இன்னும் சொல்லப் போனால், ரத்தக்கறை படிந்த, இருள் நிறைந்த ஜார்மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த ரஷ்யாவைக் காட்டிலும் டால்ஸ்டாயின் புகழ் வெளியே தான் அதிகமாகப் பரவிற்று.

உலகம் போற்றும் இந்த இருபெரு நவீனங்களைச் சிருஷ்டித்ததற்காகஇவர் மகிழ்ச்சியோ பெருமையோ கொண்டாரா என்றால் அது தான் இல்லை. இந்த நாவல்களை உருவாக்கியதற்காக வேதனைப் பட்டார்; வெட்கப் பட்டார். ஆகவே, தன் எஞ்சிய வாழ்நாளை அன்பு, சமாதானம், வறுமை ஒழிப்பு இவைகளைப் போதிக்கும் சிறு மடிப்புக்களை (Phamplet) வெளியிடுவதிலே செலவிட்டார். இந்தப் புத்தக மடிப்புக்களை மலிவுப் பதிப்புக்களாக அச்சிட்டு தள்ளு வண்டிகளில் வைத்துக் கொண்டு வீட்டுக்கு வீடு விநியோகிக்கும்படி செய்தார். நான்கு வருஷங்களில் 1,20,00,000 பிரதிகள் நாடெங்கும் விநியோகிக்கப் பட்டன.

மனைவியுடன் அவர் 50 வருஷங்கள் வாழ்க்கை நடத்தினார்.

டால்ஸ்டாய் தமது எண்பத்து இரண்டாவது வயதில் வேதனை நிறைந்த அந்த வீட்டில் மனைவியுடன் இனியும் வாழமுடியாது என்ற முடிவுக்கு வந்தார். 1910ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ந் தேதி இரவு வெளியே இருள் கப்பிக் கிடந்தது. பனிக்காற்று சீறிக் கொண்டிருந்தது. எலும்புகளின் உள்ளேயும் புகுந்து நடுக்கும் குளிர். எங்கு போகிறோம் என்ற நிலையான நோக்கமின்றி டால்ஸ்டாய் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டார்.

பதினொரு நாட்களுக்குப் பிறகு அவரது உடல் ரஷ்ய நாட்டின் ஏதோ ஒரு மூலையிலுள்ள ஒரு சாதாரண ரயில்வே ஸ்டேஷனில் விறைத்துப் போய்க் கிடந்தது. அந்த மேதையின், ஞானியின் புனித உடலைச் சுற்றி ஏழைக் குடியானவர் சூழ்ந்து நின்று கொண்டிருந்தனர்.

''மூர்த்தி''

(காந்தித்தாத்தாவின் குரு லியோ டால்ஸ்டாயின் 150-வது நினைவு விழா உலகெங்கும் கொண்டாடப் படுகிறது.)



அரனை மறவேல்!

சிவனுக்கு அரன் என்று ஒருபெயர் உண்டு. அதைத்தான்,

''அறவாழி அந்தணன்தாள்
சேர்ந்தார்க்கல்லால்
பிறஆழி நீந்தலரிது'' — என்று திருக்குறள் கூறுகிறது. உலகைப் படைப்பவர் பிரம்மா — படைத்த உலகைக் காப்பவர் மஹா விஷ்ணு — படைக்கப் பட்ட உயிரினங்களுக்கெல்லாம் ஓய்வை அளித்து, அமைதியையும் அளிப்பவர் சிவன்.

சிவம் என்றாலே மங்கல வடிவமானது என்று பொருள். அந்த மங்கலவடிவமான சிவனை — அரனை, மறவேல்— மறக்க வேண்டாம். பலர் பல காரியங்களைச் செய்து பலனைப் பெறும்போது, அது என்னால் — என்னுடைய முயற்சியினால் செய்யப்பட்டது என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களே காரியங்களைச் செய்து தோல்வி அடையும் பொழுது, 'இது விதியின் செயல் — கடவுளுக்கு என்மீது கருணையில்லை' என்றெல்லாம் கூறுகிறார்கள்.

அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்ற நினைவு நம்மிடையே இருந்தால், நாம் அரனை ஒருநாளும் மறக்க மாட்டோம்.

''பெற்றதாய்தனை மகமறந்தாலும்
பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்
உற்றதேகத்தை உயிர்மறந்தாலும்
உயிரைமேவிய உடல்மறந்தாலும்
கற்றநெஞ்சகம் கலைமறந்தாலும்
கண்கள்நின்று இமைப்பது மறந்தாலும்
நற்றவத்தவர் உள்ளிருந்தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே''

என்று பாடினார் இராமலிங்க அடிகள். அப்பர்—மாணிக்க வாசகர் போன்ற பல பெரியோர்களும், ''சிவனை மறந்து எவ்விதம் வாழ்வேன்!'' என்கிறார்கள்.

வாழ்க்கையில் நாம் பல ஊருக்குப் போகிறோம் — பல பொருள்களைப் பார்க்கிறோம் — பல அபூர்வ சம்பவங்களைக் காண்கிறோம் அவைகளை மறந்து போவதால் பெரிய தவறு ஒன்றுமில்லை; ஆனால் இத்தனைக்கும் மூலகாரணமாயுள்ள, படைத்துக் காத்து, அருள் பாலிக்கிற அரனை மறக்கக் கூடாது. கோவிலில் பூஜை செய்வதோ, வீடுகளில் படம் வைத்துக் கொள்வதோ, உபந்யாசங்கள் நடைபெறச் செய்வதோ இதெல்லாம் கடவுளை மறக்காமல் இருப்பதற்காகவே ஏற்பட்டன.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனை விடப் பரிதவிப்பது போல் நாடகமாடினார்!

"நான் என்ன செய்வேன் அர்ஜுனா? நீதான் பார்த்துக் கொண்டிருந்தாயே! நான் மனமார ஆசீர்வாதம் செய்தேனா, இல்லையா? அப்படியும் ஏனோ இவ்வாறு விபரீதம் நடந்து விட்டதே! சரி, போனது போகட்டும். கசடனை தனிகன் ஒருவனைப் பற்றிச் சொன்னாயே! அவனிடம் என்னை அழைத்துப் போ" என்றார்.

'கண்ண பெருமான் என்ன இப்படிப் பேசுகிறார்? இவரது கை மீறிய விஷயமும் உண்டா, என்ன?' — அர்ஜுனனுக்குப் புரியத்தான் இல்லை. ஆயினும் சுவாமி எவ்வளவு நெருக்கமாகப் பழகினாலும் அவரிடம் மிகவும் உரிமை எடுத்துக் கொண்டு எதையும் கேட்டுவிட முடியாது. பகவான் பாசமே உருவாக வெளியில்

பாபா சொன்ன பாப்பாக் கதை

ரா. கணபதி



தோன்றினாலும், உள்ளே சற்றும் பந்த பாசமில்லாத துறவியாதலால், எவ்வளவு அத்தியந்தமானவையாயினும் முறைமீறி நடந்து கொண்டு விட்டால் உடனே அவர் தொடர்பை அடியோடு கத்தரித்தும் விடுவார். அதனால் அர்ஜுனன் அவரைக்குடைந்து எதுவும் கேட்காமல் துஷ்ட தனிகனிடம் இட்டுச் சென்றான். 'இங்கே என்ன விபரீதம் நடந்து விடுமோ?' என்று உள்ளூற அவனுக்குப் பயம்தான்.

தனிகன் வீட்டில் அவர்கள் கண்ட காட்சி அர்ஜுனனுக்கு மிகவும் ஆறுதலாயிருந்தது.

அந்தத் தனிகன் அப்போது சதுரங்கச் சூதாட்டம் ஆடி, ஆட்டத்துக்கு ஆட்டம் தன் சொத்துக்களைத் தோற்றுக் கொண்டிருந்தான்.

இத்தனை நாள் வரையில் எங்கே தன் சொத்தில் ஒரு குன்றிமணியாவது இழக்கும்படியாகுமோ என்ற பயத்தில் சூதாட்டம் முதலியவற்றை அவன்

ஆடியதில்லை என்றும், இன்றுதான் வழக்கத்துக்கு விரோதமாக விளையாட ஆரம்பித்து மேலும் மேலும் ஆஸ்தி பாஸ்திகளை இழந்து வருகிறான் என்றும் சுற்றியிருந்தோரின் பேச்சிலிருந்து புரிய வந்தது.

'ஓஹோ! இது கண்ணனின் காரியந் தான். எக்காரணத்தினாலோ அந்த ஏழை பக்தனுக்கு நலன் வழங்கிநியாயம் செய்யாவிடினும், இந்தக் கொடிய தனிகனுக்குரிய தண்டனை தரவேண்டுமென்று ஸ்வாமியே தான் அவன் மனத்தில் புகுந்து அவனைச் சூதாட்டத்தில் இழுத்து விட்டு, அவனது நிலம், நீச்சு, வீடு, வாசல், என்று ஒவ்வொன்றாக இழக்கு மாறு செய்திருக்கிறார். இந்தப் பாபிக்கு இது வேண்டியதே!' என்று ஆறுதல் பெற்றான் அர்ஜுனன்.

கடைசிக் கடைசியாக இன்னும் ஒரு ஆட்டம்தான் மிச்சம் இருந்தது. அர்ஜுனனுக்கு ஆதியில் தாங்கள் கௌரவரிடம் சூதாடிக் கடைசி ஆட்டத்தில் திரௌபதியையும் இழந்தது நினைவுக்கு வந்தது. அப்போது அவளது மானம் காத்தருளிய இந்தப்பரந்தாமன் கண்ணன் இப்போது இந்தத் தனிகனை அடியோடு ஓட்டாண்டியாக்கத்தான் வேண்டும் எனக் கருதினான்.


''கண்ணா! இது கடைசி ஆட்டம். இதில் இவன் தோற்றால் ஒரு செப்புக் காசு மீதியின்றி எல்லா உடைமைகளையும் எதிராளிக்குக் கொடுத்துவிட வேண்டுமென்றும், ஜயித்தால் இது வரை இவன் இழந்த அனைத்தையும் திரும்பப் பெறுவது மட்டுமின்றி, எதிராளியிடமிருந்து லக்ஷம் பொன் பெற வேண்டுமென்றும் பந்தயம் வைக்கப் பட்டிருக்கிறது. இதுவே சமயம் பிரபு, இவனுக்கான தண்டனையைத் தர'' என்று அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணனிடம் விண்ணப்பித்துக் கொண்டான்.

உடனே சுவாமி கையைத் தூக்கி அந்தரத்தில் (வெட்ட வெளியில்) ஏதோ எழுதுவது போல பாவனை செய்தார். அவர் அப்படிச் செய்வதற்கு உள்ளர்த்தம் உண்டாதலால், தனிகனின் தனம் அவ்வளவும் அவனை விட்டு அகலவே இப்போது கட்டளை பிறப்பித்திருக்கிறார் என்று அர்ஜுனன் எண்ணினான்.

பாய்ச்சிகையை (சொக்கட்டான் காயை) உருட்டி விட்டான் பணக்காரன். அதில் விழுந்த விருத்தத்தைப் பார்த்து, ''ஆஹா, ஆஹா!'' என்று ஆனந்தக் கூத்தாடினான் அவன்.

''ஹா'' என்று ஏமாற்றத்திலும் துயரத்திலும் பெருமூச்சு விட்டான் அர்ஜுனன்.

ஆம்! கண்ணன் இம்முறையும் விபரீதமாகவே செய்து விட்டார்! அந்தக் கடைசி ஆட்டத்தில் தனிகன் ஜெயித்து விட்டான். முன்பு தான் இழந்திருந்த சொத்துக்கள் அனைத்தையும் திரும்பப் பெற்றது மட்டுமின்றி, அதிகப்படியாக ஒரு லக்ஷம் பொன் வேறு அடைந்து விட்டான்!



13.8.78 கோகுலம் இதழில் 'நல்வழி' கட்டுரையில் 'வேதநூல் பிராயம் நூறு' என்று தொடங்கும் பாடல் திருவாய்மொழி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அப் பாசுரம் தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச் செய்த 'திருமாலை' என்னும் பிரபந்தத்தின் மூன்றாவது பாசுரமாகும். திருவாய்மொழி நம்மாழ்வாரால் அருளப் பெற்றது.
திருப்பாதிரிப்புலியூர். வி. எஸ். வீரராகவன்'

(அச்சுப் பிழை நேர்ந்தமைக்காக வருந்துகிறோம். — ஆசிரியர்.)

''ஐயோ, கண்ணா! இப்படி நீ மறுபடி அநீதி செய்யலாமா?'' என்று குமுறிக் கேட்டான் அர்ஜுனன்.

''என்னை ஏன் குற்றம் சாட்டுகிறாய்? என்னால் வஞ்சனையில்லை. என்னவோ இரண்டு இடத்திலும் இப்படியாகி விட்டது'' என்று கையை விரித்தான் மாயக் கண்ணன்.

''ஐயனே! நீ என்ன நாடகம் நடிக்கிறாயோ, நான் அறியேன். அறிந்து தான் என்ன ஆகவேண்டும்? நீயே தான் எனக்கு கீதோபதேசம் செய்கையில், பொம்மலாட்டக் காரன் ஸூத்திரக் கயிற்றை ஆட்டி எல்லாப் பொம்மைகளையும் நாடகம் ஆட வைப்பதுபோல் நீ ஒருத்தனேதான் ஸகலப் பிராணிகளுக்குள்ளும் இருந்து அவர்களைப் பல விதத்தில் காரியம் செய்யப் பண்ணுகிறாய் என்று சொல்லியிருக்கிறாயே! உன் லீலைகளை ஆராயவும், முடிவு கூறவும் நான் யார்?'' என்றான் அர்ஜுனன்.

''இப்படிச் சொல்கிறாயே தவிர, உள்ளூற உனக்கு நான் இப்படிச் செய்து விட்டேன் என்று மனத்தாங்கலாகத்தான் இருக்கிறது'' என்றார் பரமாத்மா.

அர்ஜுனன் வெட்கமுற்றுத் தலை குனிந்தான்.

ஸ்வாமியின் முன்னிலையில் பலர் பக்தியில் மிகவும் பக்குவமாகிவிட்டது போலவும், வேதாந்தத்தில் கரை கண்டு விட்டது போலவும் பேசித் தங்களைப்பற்றி அவர் உயர்வாக எண்ணித் தட்டிக் கொடுப்பார் என்று எதிர்பார்ப்பார்கள். ஆனால் அனைத்தும் அறிந்த ஸ்வாமியோ அவர்கள் செய்வது நடிப்பே என்று தெரிந்துகொண்டு, தட்டுவதற்குப் பதில் குட்டத்தான் செய்வார்.

பற்பல ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

அர்ஜுனன் அநேக ராஜ்ய காரியங்களில் ஈடுபட்டிருந்ததால் அந்த ஏழை பக்தன், பணக்காரக் கசடன் இருவர் கதையையும் அடியோடு மறந்துவிட்டான்.

இச்சமயத்தில் ஒருநாள் பகவானே அவனுக்கு அவ்விருவரையும் பற்றி நினைவூட்டினார். ''அர்ஜுனா! நீ அவர்களுடைய ஊருக்குச் சென்று அவர்கள் எப்படியிருக்கிறார்களென்று பார்த்து வா'' என்றான்.

எதற்காக இவ்விதம் கூறுகிறார் என்று புரியாவிடினும், பகவானின் ஆக்ஞை என்பதால் உடனே அர்ஜுனன் புறப்பட்டான்.

ஏழை பக்தன் இருந்த பொத்தல் குடிசைக்கு முதலில் சென்றான்.

இப்போது அந்தக் குடில் ஓர் அழகிய ஆசிரமமாயிருந்தது. அந்தச் சூழ்நிலையிலேயே அமைதியும் பக்தியும் தெய்விகமும் குடிகொண்டிருந்தன. பலர் அடக்க ஒடுக்கத்துடன் ஆசிரமத்துக்குச் செல்வதும் வருவதுமாக இருந்தனர்.

சாதாரணப் பிரஜை போல மாறு வேடமிட்டிருந்த அர்ஜுனனும் விவரம் ஏதும் தெரியாமல், மிகுந்த ஆர்வத்தோடு அவர்களில் ஒருவனாக ஆச்ரமத்துள் சென்றான்.

உள்ளே அவன் கண்ட காட்சி அவனை வியப்பில் ஆழ்த்தியது.

முன்பு அவன் கண்ட அதே ஏழைக் கிழவன், இப்போது நல்ல தொண்டு கிழவராக, பழுத்த பழமாக ஆகி, சாமியார் உருவில் ஆசிரம மத்தியில் ஒரு பீடத்தில் அமர்ந்திருந்தான்.

அன்று அவரிடம் கண்டதைவிடப் பல மடங்கு தேஜஸும், அருளும் இன்று அவரது திருஉருவத்தில் பொலிந்தன.

தன்னையுமறியாமல் சாமியாரின் முன் தண்டனிட்டான் அர்ஜுனன்.

அவனை அன்புக் கண்களால் ஏற இறங்க ஆழ்ந்து நோக்கிய சாமியார் புன்னகையுடன் கேட்டார்: ''பரிதாபத்துக்குரிய எளியோனாக இருந்த நான் எப்படி இன்று இத்தனை மக்களால் வணங்கப்படும் ஸ்வாமிகளாக ஆனேன் என்று தானே ஆச்சரியப்படுகிறாய்? உன் மனத்தில் இந்தக்கேள்வி எழுவதை எப்படி நான் புரிந்துகொண்டேன் என்றும் வியக்கிறாய், அல்லவா?''

அர்ஜுனன் ஆம் என்ற பொருளில் தலையாட்டி, அவர் கூறப்போகும் விடையை ஆவலுடன் எதிர்நோக்கி நின்றான்.

ஸ்வாமிகள் கூறினார்: ''அப்பா, மாறுவேஷத்தில் வந்துள்ள அர்ஜுனா!

அட்டை விரன்:

அஞ்சில் வளைஞ்சா அறிவாகும் — நாம்
அம்பதில் வளைஞ்சா முறிவாகும்
நெஞ்சில் விளைஞ்ச மொழியிதனை —நான்
நெனைச்சே வளைச்சேன் வில் இதனை.

— குடுக்கையார்

வண்ணப்படம்: டி. ஆர். பாலசுப்ரமணியன்



அன்று கண்ணன் என் ஒரே உடைமையான மாட்டைச் சாக அடித்து எனக்குப் பெரும் அநீதி இழைத்து விட்டான் என்று நினைத்தாய் அல்லவா? அது அநீதி அல்ல. மாறாக அதுதான் என்னை இப்போது நீ பார்க்கிற நிலைக்கு உயர்த்திய அநுக்கிரஹம்.''

சாமியார் இங்கு சற்று நிறுத்தி விட்டு அர்ஜுனனைப் பார்த்தார். 'இதென்ன புதிர் போடுகிறாரே!' என்று அர்ஜுனன் யோசித்தான். சாமியார் தொடர்ந்தார்.

''அர்ஜுனா! என் ஒரே உடைமையாக மாடு இருந்தவரையில், அதையும் அதன் கன்றையும் நான் பேண வேண்டும், அதனால் என்னைப் பேணிக் கொள்ள வேண்டும் என்ற பற்று எனக்கு இருக்கத்தான் செய்தது. அந்தப் பசுவும் மரித்த பின்தான் அந்தப் பற்றும் நீங்கிற்று. என் ஒரே உடைமையும் போயிற்றே என்று நான் அலறி விழுந்த அதே சமயத்தில் எனக்கு நல்லறிவு உதித்தது. உடைமை இருந்தால் அஹங்காரம், (நான் என்ற பற்று), மமகாரம் (என்னுடையது என்ற பற்று) இருக்கத்தான் இருக்கும். பசு போனதோடு என் உடைமை போனதால் என் ஒரே பற்றும் இற்று விழுந்து, எனக்கு நன்மையே ஏற்பட்டிருக்கிறது என்று உணர்ந்தேன். 'இனி எனக்கு உடைமையில்லை; நானே கண்ணனின் உடைமையாகி விட்டேன். அவன் என்னை எப்படி வைத்தாலும் வைக்கட்டும். நான் உண்டு உயிர்வாழ வேண்டுமென்று அவனுக்குத் திருவுள்ளம் இருந்தால் எனக்கு எவ்வகையிலேனும் உணவு போடட்டும்; இல்லாவிட்டால் சாகத்தான் அடிக்கட்டும். என்னையே நான் பேணிக் கொள்வதாகவோ, பசுவை நான் பேணுவதாகவோ நினைத்ததெல்லாம் கூட செருக்குத்தான். கோ—பாலன் என்ற பேரில்' பசுக்களை ஆயன் பேணுவது போல் உயிர்கள் அனைத்தையும் காக்கும் கண்ணன் விட்ட வழியாகட்டும். இனி என் வசம் ஏதும் இல்லை' என்று அந்த விநாடியே சரணாகதி செய்தேன்.

''அர்ஜுனா! 'நான்', 'எனது' என்ற பற்றுக்களை நாம் உள்ளத்தில் அடைத்து வைத்துக் கொண்டிருக்கும் வரையில் அங்கே பகவானுக்கு இடமே இல்லாமற் போகிறது. பற்றே இல்லை என்று நான் விடுமாறு செய்யவே அவன் என் பசுவைக் கொன்றான். உடனே அஹம்பாவம் நீங்கிய எனக்குள் அவனே குடிகொண்டு விட்டான். கண்ணன் என்ற உருவில் இல்லாமல், ஞானமாகவும் கருணையாகவும் எனக்குள் புகுந்து கொண்டான். அந்த ஞானத்தில் நான் என் அளவில் நிறைந்த சாந்தியை அடைந்து பரிபூரணத் திருப்தி பெற்று விட்டேன். அந்தக் கருணையினால், என் உத்தேசமின்றியே, தன்னால் மக்களுக்கு அருள் பாய்கிறது. அவர்கள் இங்கு வந்து, பக்தி செய்து, பலவித நலன்களைப்பெறுகிறார்கள். இந்த நலனை அருள்வது நானல்ல; என் மூலமாகக் கண்ணனே கருணை புரிகிறான். நான் புரிவதாக நினைத்து, பக்தர்கள் இந்த ஆசிரமத்தை அமைத்துத் தந்து, எனக்கு உணவு உடை முதலிய தேவைகளைப் பூர்த்தி செய்து தருகிறார்கள். பிறரது கஷ்டங்களைப் போக்கவும், அவர்களுடைய மனத்திலிருப்பதை அறியவும் எனக்குச் சக்தி தந்து அதனால் அவர்களுக்கு என் மூலம் நன்மை செய்யும் ஸ்ரீ கிருஷ்ணனேதான், அவர்கள் மூலம் இந்த என் உடலுக்கு வேண்டிய எல்லாவற்றையும் அருள்கிறான்.''

அர்ஜுனனுக்கு அப்போதுதான் புரிந்தது: ஆதியில் கண்ணன் தவறு இழைத்ததாகத் தான் நினைத்தாலும், அதனால் எத்தகைய நல்விளைவு ஏற்பட்டிருக்கிறதென்று.

இனி அந்தப் பணக்காரன் கதை என்ன என்று பார்க்கப் புறப்பட்டான்.

(அடுத்த இதழில் நிஜமாகவே முடியும்).



சினிமாப் பைத்தியம்

கமலவேலன்

வகுப்பிற்குள் நுழைந்தவுடன் மாணவர்களின் எண்ணிக்கையைச் சரிபார்த்து விடுவார் ஆசிரியர் ராமலிங்கம். அன்றும் அதேபோல் எண்ணினார். மூன்றுபேர் வரவில்லை.

மூர்த்திக்குக் காய்ச்சல். கௌதமன் திருமணத்திற்குப் போயிருக்கிறான். வரதராஜன் ஏன் இன்று வரவில்லை? முதல்நாள் ஞாயிற்றுக் கிழமை, சாயங்காலம் கடைவீதியில் அவரைப் பார்த்த போது கூட அவன் 'லீவு' எடுக்கப் போவதைப்பற்றி ஒன்றும் கூறவில்லையே!

வரதராஜன் வகுப்பில் நன்றாகப் படிக்கும் முதல் ஐந்து மாணவர்களுள் ஒருவன். அவன் அப்பாவும், அம்மாவும் கூலிவேலை செய்துதான் பிள்ளைகளின் காலி வயிற்றை நிரப்பி வந்தனர். மூன்று ஆண்களும் மூன்று பெண்களுமாக ஆறு உருப்படிகளுக்கு வரதராஜனின் பெற்றோர் இரை போட்டாக வேண்டும்.

வரதராஜன் மட்டுமல்ல வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களது ஜாதகமும் ஆசிரியர் ராம லிங்கத்திற்குத் தெளிவாகத் தெரியும். தன் வகுப்பில் எந்த மாணவனைப் பற்றித் தூக்கத்தில் கேட்டாலும் துடிப்போடு சொல்வார்.

பாகற்காயாகக் கசக்கும் பாடங்களைக் கூட பாகம் பண்ணிய பாதாம் பருப்பாய், பக்குவமாய் மாணவர்களுக்குத் தருவதில் அவர் வல்லவர். கண்டிப்புக்கும் கருணைக்கும் பெயர் பெற்றவர். எனவே அவர் வகுப்பில் மற்ற வகுப்பை விட 'லீவு' எடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகத் தான் இருக்கும்.

''குமார்.... நீ... வரதராஜனைக் காலையில் பார்த்தாயா?'' அந்தத் தெரு மாணவனிடம் கேட்டார்.

''சார் காலையிலே நான் பார்க்கல்லே. ஆனால் நேத்தி மத்தியானம் 'சென்ட்ரல்' சினிமாக் கொட்டகைப் பக்கம் பார்த்தேன்.''

''நீ சினிமாவுக்குப் போயிருந்தியா?''

''இல்லே சார், நான் வேற வேலையாக அந்தப் பக்கம் போனப்போ... அவனைப் பார்த்தேன்...''

''அவன் ஒரு சினிமா விளம்பர வண்டி பின்னாலேயே போனதைப் பார்த்தேன் சார்'' கோபால் எழுந்து சொன்னான்.

ஆசிரியர் முகம் கோபத்தால் சிவந்து விட்டது.

''அயோக்கியப் பயல்... சினிமாக் கிறுக்குப் பிடிச்சு, ஊர் சுத்த ஆரம்பிச்சுட்டானா? வரட்டும் பார்த்துக் கொள்ளலாம்.'' அத்துடன் அவனைப் பற்றிய விசாரணைக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

சென்ற ஞாயிற்றுக் கிழமைகூட ஒரு சினிமா தியேட்டர் வாசலில் நின்று கொண்டிருந்தான். மறுநாள் வகுப்புக்கு வந்தபோது அவனைக் கண்டித்தார்.

ஒரு சிலரைப்போல் சினிமாவையே முழுக்க முழுக்க வெறுக்கும் மனிதர் அல்ல அவர். 'சில்ட்ரன்ஸ் ஃபிலிம் சொஸைடி'யிலிருந்து எடுக்கப்பட்ட திரைப்படம் எதுவானாலும் அவரே

எல்லா மாணவர்களையும் அழைத்துச் செல்வார். குழந்தைகளின் மனப்பக்குவத்திற்குத் தக்க படங்கள் வந்தால் பார்க்கும்படி சிபாரிசுகூடச் செய்வார். 'கப்பலோட்டிய தமிழன்' 'நம்ம குழந்தைகள்...' இப்படி அவர் சிபாரிசு செய்த படங்கள் பலஉண்டு.

வீட்டில் நிலவும் வறுமைச் சூழ்நிலை உணராது எட்டாம் வகுப்புப் படிக்கும் ஒரு மாணவன் வாரம் தவறாமல் சினிமா பார்ப்பது முறை கேடான செயல் ஆகும். பொறுப்பை அவனுக்குத் தாம் உணர்த்தத் தவறிவிட்டோமோ என்றுகூட மனம் பதை பதைத்தார். அவர் மனம் பாடத்தில் செல்லவில்லை. நல்ல மாணவன்ஒருவன் இப்படி சினிமா பைத்தியம் பிடித்து அலைகிறானே என்ற கவலை அவருக்கு வந்துவிட்டது.

பெற்றவர்களுக்கு ஒரு குடும்பம். ஆசிரியருக்கோ நாற்பது குடும்பங்கள். ஆலம் விழுதுகள்போல் ஆயிரம் கவலைகள் அவருக்கு உண்டு!

மறுநாள் காலை வரதராஜன் வகுப்புக்கு வந்து விட்டான்.

மாணவர்கள் அனைவரும் பயத்தால் வாய் பொத்தி உட்கார்ந்திருந்தார்கள்.

ஆசிரியர் பிரம்புடன் வகுப்பிற்குள் நுழைந்தார். படிக்கவில்லை என்பதற்காக அவர் என்றுமே பிரம்பைக் கையில் எடுத்தது கிடையாது. ஒழுக்கக் குறைவைக் கண்டு விட்டால் ஓங்கி ஓங்கிச் சாத்தி விடுவார்.

வராத பிரம்பு அன்று வரதராஜனுக்காக இல்லை, 'வாராத'ராஜனுக்காக வந்தது!

திங்கட் கிழமை மாலையும் தியேட்டர் பக்கம் வேறுசில மாணவர்கள் பார்த்திருக்கின்றனர். அந்தச் செய்தி அவர்





நிரபராதியான ஒருவனுக்கு எவன் தீங்கு செய்தாலும், பரிசுத்தமான ஒருவனுக்கு எவன் தீங்கு செய்தாலும், காற்றுக்கு எதிராகத் தூவிய மண் தூவியவன் மேலேயே வந்து விழுவதுபோல் தீங்கு செய்த அந்த மூடனையே பாவம் பற்றிக் கொள்கிறது.

கௌதம புத்தர்.

கோபத்திற்கு நெய் வார்த்ததுபோல் ஆயிற்று.

''வரதராஜா... நேற்று ஏன் வகுப்புக்கு வரவில்லை.''

''சார்... சார்... வீட்டில் வேலை இருந்தது.'' வார்த்தைகள் நடுக்கத்துடன் வந்தன.

''சாயங்காலம் தியேட்டர்ல வேலை இருந்ததாக்கும்!''

''சார்... அது!''...

அதற்கு மேல் அவர் பேசவில்லை.

தொடர்ந்து இரு ஞாயிற்றுக்கிழமை தியேட்டரில் பார்த்திருக்கிறார்கள். முதல் நாள் மாலைகூட பார்த்திருக்கிறார்கள்....

சுவீர், சுவீரெனப் பிரம்பைச் சுழற்றித் தீர்த்து விட்டார்.

''சினிமாப் பைத்தியம் பிடித்து அலையாதே. நல்ல மாணவனாக வளர்ந்தவன் நீ. அந்தப் பெயரைக்கெடுத்து கொள்ளாதே. போ... போ...'' போய்... உட்கார்.''

வகுப்பு சில நிமிடங்கள் கழித்தே சகஜ நிலைக்கு வந்தது.

எல்லாரும் வகுப்பு முடிந்துபோய் விட்டார்கள். வரதராஜன் மட்டும் நின்று கொண்டிருந்தான். அவன் கண்கள் அழுது அழுது வீங்கியிருந்தன.

''என்ன வரதராஜா... என்ன வேண்டும்?'' சினம் தணிந்தவர் கனிவோடு கேட்டார்.

அவன் கேவிக் கேவி அழுதான்.

''வரதா...! தவறு செய்ததற்கு தண்டனை கொடுத்தேன். அதை இன்னுமா நினைத்துக் கொண்டிருக்கிறாய்? இனிமேலாவது படிப்பில் கவனத்தைச் செலுத்து. முழுஆண்டுத் தேர்வு நெருங்கி விட்டது.'' ஆறுதல் கூறினார்.

''சார்... சத்தியமா... நான் சினிமாவுக்குப் போகல்லே...''

''எத்தனையோ மாணவர்கள் உன்னைத் தியேட்டர் வாசலிலும், சினிமா விளம்பர வண்டி பின்னாலும் அலைந்ததைப் பார்த்திருக்கிறார்களே. அவர்கள் பார்த்தது பொய்யா?'' அவருக்கு மறுபடியும் கோபம் வந்து விட்டது.

''இல்லே... சார்... நீங்க பத்து நாளைக்கு முன்னாலே, 'முழுப் பரீக்ஷை நெருங்குது. அதனாலே ஏதாவது 'ரஃப்' நோட்டில் பழைய கணக்குகளை போட்டுப் பார்க்க சொல்லியிருந்தீர்கள். ஆனால் எங்கிட்டேயிருந்த ஒரே ஒரு நோட்டும் தீர்ந்து போச்சு. அப்பாவிடம் கேட்டேன். காசு இல்லே என்று கையை விரித்து விட்டார்.''

''அதனாலே....''

''எப்படியும் 'ஒன்சைடு' நோட்டாவது தைத்து விடணும்னு நினைச்சேன். அதனால்தான் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் தியேட்டர் பக்கம்போய் அங்கே கொடுக்கிற சினிமா நோட்டீஸை எல்லாம் ஒன்று சேர்த்தேன். நேற்று சந்தை நாள். அதனாலே விசேஷமாகப் பெரிய நோட்டீஸ் தருவாங்கன்னு பள்ளிக்கூடம் கூட வராமல் அங்கே போயி நின்னு ஒவ்வொரு நோட்டீஸா வாங்கிச் சேகரித்தேன்... சார்....!''


''வரதா...'' விக்கித்து விட்டார் ராமலிங்கம்.

''பொய் இல்லே சார்... இதோ பாருங்க...'' என்று தன் அழுக்கடைந்த பையிலிருந்து பல வண்ணத் தாள்களால் தைக்கப் பட்டிருந்த ஒரு நோட்டை எடுத்து அவரிடம் பயத்துடன் நீட்டினான்!

ஆசிரியர் ராமலிங்கம் அவனது அளவற்ற ஆர்வத்தை எண்ணிப் பெருமிதம் கொண்டார். ஆனந்த அதிர்ச்சியில் சிலையாய் அமர்ந்து விட்டார்.

ஆசிரியரின் கோபம் இன்னும் தணியவில்லை என்று நினைத்து வரதராஜன் விழிநீரைப் பெருக்கி நின்றான்.


''வரதராஜா...! அழாதே... வரும் காலம் ஒளிபொருந்தியதாக இருக்கும் என்பதற்கு உன்போன்றோர் அஸ்திவாரக் கற்கள் தம்பி, அழாதே!'' தான் அவசரப்பட்டு ஆத்திரத்தில் அடித்து விட்டதற்காக வருந்தி அவனை அன்போடு — பாசத்துடிப்போடு தட்டிக் கொடுத்தார் ராமலிங்கம்.




கிட்டுவும் பட்டுவும் சினிமாப் பார்த்து விட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள் காரில். அவர்கள் அப்பா தான் காரை ஓட்டி வந்தார் முன்னால் நீண்டு நெளிந்து கிடந்த தார் ரோடு ஏன் அப்படி இருள் கனத்துக் கிடக்கிறது? சட்டென்று கிட்டுவுக்குக் காரணம் புரிந்தது. ''அப்பா... நீங்கள் காரின் ஹெட்லைட்டைப் போட மறந்து விட்டீர்கள்!'' என்றான்.

அவர் மறந்தாலும் அவர்களின் ஹெட்லைட்டை நீங்கள் போட்டு ஒளி உண்டாக்கி வழிகாட்டலாம். என்ன திகைக்கிறீர்கள்? அருகிலுள்ள அரைப் பக்கத்தைக் கிழித்துத் தனியே எடுங்கள் அதன் மேல் பாதியில் சாம்பல் நிறமாக உள்ள பகுதியில் புள்ளியிட்ட இரண்டு அமைப்புக்களையும், கீழேயுள்ள பிறை வடிவ அமைப்பையும் ஒரு பிளேடினால் சுத்தமாக வெட்டி எடுத்து விடுங்கள். பிளேடைக் கையாளும்போது கவனம் தேவை. அந்தப் பக்கத்தை 'ஏ' என்று குறிப்பிட்டுள்ள இடத்தில் இரண்டாக மடித்துக் (பின்பக்கமாக) கொள்ளுங்கள். மடித்த பக்கத்தை ஜன்னலுக்கு முன்னாலோ, மின்சார விளக்கின் முன்னாலோ தூக்கிப் பிடித்துக் கொண்டு பாருங்கள். கிட்டுவின் அப்பா காரின் ஹெட் லைட்டுக்களை போட்டிருப்பார். அதிலிருந்து தானாக ஒளி நீண்டு விழும் பளீரென்று.

— சலன்





ராஜாஜியின் ஆசை!

முற்றும் துறந்த முனிவர் போல வாழ்ந்த ராஜாஜிக்குக் கூட ஆசை இருந்ததா? ஆம்! இருந்தது.

என்ன ஆசை தெரியுமா?

சொல்கிறேன்.

இதோ ராஜாஜித் தாத்தா ஆசைப் பட்டதைப் படியுங்கள்.

'எனது ஆசை என்னவென்றால் ஆண்குழந்தைகள், பெண்குழந்தைகள் எல்லோரும் பாரதியார் பாடல்களை நன்றாகப் பாடக் கற்றுக் கொள்ள வேண்டும். பிறகு அது ரொம்ப நாளைக்கு பிரயோஜனப்படும். பாரதி நம் தமிழ் நாட்டுக்குப் பெரிய கவி. முன்காலத்திலிருந்த கவி போன்றவர். நம் நாட்டில் தேச பக்தியை அவர் பாட்டினால் ஏற்படுத்தினார். தேச பக்தி மட்டுமல்ல, தெய்வ பக்தியையும் உண்டாக்கினார். தேச பக்தி, தெய்வபக்தி இரண்டையும் தூண்டி அவரது பாட்டுகள் உணர்ச்சியையும் உண்டாக்கின. அது மட்டுமல்ல, இங்கிலீஷ் படித்தவர்களுக்குத் தமிழ்ப் பக்தியை உண்டாக்கின. எல்லோருக்கும் தைரியத்தை உண்டாக்கின. வேலை செய்ய வேண்டும் என்கிற ஆசையை உண்டாக்கின. பாட்டினால் இவ்வளவும் உண்டா என்று நினைக்கலாம்.




பாரதி பாட்டுகளை நன்றாகக் கற்றுப் பாடினால் உங்களுக்கே அது தெரியும். இதனால்தான் வருஷா வருஷம் பாரதி தினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

பிள்ளைகளெல்லாம் சரஸ்வதி தேவியை வணங்குவது போல் கவிஞர்களையும் வணங்கித் தொழ வேண்டும்.'

"சொல்லில் உயர்வு தமிழ்ச்
சொல்லே! - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!
— பாரதியார்

— வி. ச. வாசுதேவன்





12 5 29 6 14 23

மூளைக்கு வேலை

பூச்சியும் கால்களும்

கிட்டுவுக்குப் பூசசிகளைப் பிடித்து விளையாடுவதென்றால் மிகவும் விருப்பம். ஆனால் அவைகளைத் துன்புறுத்த மாட்டான். ஒரு சமயம் சிலந்திகளையும் வண்டுகளையும் பிடித்து ஒரு பெட்டிக்குள் போட்டான். மொத்தம் அவற்றின் எண்ணிக்கை 8. இப்போது அவைகளின் கால்களை எண்ணிப் பார்த்தான். மொத்தம் 54 கால்கள் இருந்தன. அப்படியானால் கிட்டு பெட்டிக்குள் போட்டது எத்தனை சிலந்திகள் எத்தனை வண்டுகள்?

விடை: 3 சிலந்திகள்; 5 வண்டுகள். எப்படி? முதலில் சிலந்திக்கும் வண்டுக்கும் எத்தனை கால்கள் என்பது தெரிந்திருக்க வேண்டும். சிலந்திக்கு எட்டுக் கால்கள். வண்டுக்கு ஆறு கால்கள் இல்லையா? பெட்டியில் எல்லாமே சிலந்திகளானால் 8 × 8 = 64 கால்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால் இருப்பதோ 54 கால்கள்தான். வித்தியாசம் 10. ஒரு சிலந்தியை வண்டாக மாற்றிக் கொண்டால் எண்ணிக்கையில் 2 குறையும். மொத்தம் 5 சிலந்திகளை வண்டுகளாக மாற்றினால் 10 குறையும். அதாவது 8 சிலந்திகளில் மூன்றைச் சிலந்திகளாகவே வைத்துக் கொண்டு மீதி ஐந்தை வண்டுகளாக்கி விடு. 3 × 8 = 24, 5 × 6 = 30 24 + 30 = 54. எப்படி?

கோழியும் முட்டைகளும்

மேலேயுள்ள படத்தில் ஆறு கூடைகள் இருக்கின்றன. அவற்றில் உள்ள முட்டைகளின் எண்ணிக்கை அந்தக் கூடைகளின் கீழேயே தரப் பட்டுள்ளன. சிலவற்றில் வாத்து முட்டைகளும் சிலவற்றில் கோழி முட்டைகளும் உள்ளன.

முட்டை—வியாபாரி கூறினான்: இந்தக் கூடைகளில் உள்ள முட்டைகளை விற்றேனானால் என்னிடம் வாத்து முட்டைகளைப் போல இரு மடங்கு கோழி முட்டைகளிருக்கும். எந்தக் கூடையை மனதில் கொண்டு வியாபாரி இப்படிக் கூறினான் என்று சொல்ல முடியுமா?

விடை: வியாபாரி மனதிலிருந்தது 29 முட்டைகளை யுடைய கூடை. 23, 12, 5 என்று குறிக்கப்பட்ட கூடைகளில் கோழி முட்டைகளும் 14, 6 என்று குறிப்பிட்டுள்ளவற்றில் வாத்து முட்டைகளும் இருந்தன. 14+6=20 வாத்து முட்டைகள். ஒரு கூடையை விற்ற பிறகு மிஞ்சி இருப்பது வாத்து முட்டைகளைப் போல இரு மடங்கு கோழி முட்டைகள். ஆகவே விற்றது 29 எண்ணுள்ள கூடை. —வாண்டு

தெரிஞ்சுக்கோ!

யுரேனியம்

எந்த ஒரு நாட்டினிடம் இந்த யுரேனியம் சேமிப்பில் இருக்கிறதோ அதுவே வல்லமை பெற்றது. மர்மமான பல வியத்தகு தன்மைகளைக் கொண்டது இந்த (யுரேனியம்) உலோகம். அணுசக்தியை உற்பத்திசெய்வதற்கு யுரேனியம் முக்கியப் பங்கு வகிக்கிறது. யுரேனியத்தில் இயற்கையாக அமைந்துள்ள ரேடியேஷன் மருந்துவத் துறையில் மகத்தான காரியங்களைச் செய்கிறது. மற்றும் தொழில் துறை, விவசாயம், பயாலஜி எனப்படும் தாவர, பிராணி இயல் ஆகியவற்றிலும் இதன் உபயோகம் அளவிடற்கரியது.

சுத்தமான யுரேனியக் கட்டி பார்வைக்கு வெள்ளி அல்லது எஃகுத் துண்டைப் போலிருக்கும். ஆனால் அதன் தோற்றத்துக்கு அதன் கனமோ வியப்பூட்டுவதாகும். •ஒரு அடி நீளமுள்ள யுரேனியத் துண்டின் (க்யூப்) நிறை எவ்வளவு தெரியுமா? அரை டன்னுக்கும் மேலே. இயற்கையில் கிடைக்கும் பொருள்களில் மிகவும் கனமானது யுரேனியம்தான்.

யுரேனியத்துக்கு இரண்டு அதிசமான குணங்களுண்டு. இதன் கதிர்வீச்சு (ரேடியோ ஆக்டிவ்) அதாவது இதன் அணுக்கள் மிகமிக மெதுவாகவே பிளவு படுகின்றன. இப்படி அணுச்சிதைவு ஏற்படும்போது ஏராளமான சக்தி (ரேடியேஷன்) யை வெளியிடுகிறது. யுரேனியத்தின் சில அணுக்களைப் பிளக்கும்போது உண்டாகும் சக்தி அதி பயங்கரமானது.

ரசாயன முறைப்படி யுரேனியம் சுலபமாகப் பிரதிக்கிரியை புரியக் கூடியது. ஒரு யுரேனியம் துண்டைக் காற்றுப் படும்படி வைத்தால்வெகுவிரைவில் அதன்மீது கருப்பான பூச்சு மூடிக்கொள்ளும். காற்றிலுள்ள பிராண வாயுவுடன் யுரேனியம் கலந்து உண்டாகும் புதிய பொருளே அந்தக் கரும்பூச்சு.

இயற்கையில் சுத்தமான யுரேனியம் கிடைப்பதில்லை. யுரேனியத் தாதுப் பொருள்களிலிருந்து அதைப் பிரித்தெடுப்பது ஒரு சிக்கலானதும் ஏராளமான செலவுடையதுமான ஒருமுறை.

ஒரு பவுண்டு யுரேனியத்திலிருந்து கிடைக்கும் சக்தியானது மூன்று மில்லியன் பவுண்டு நிலக்கரியிலிருந்து கிடைக்கும் சக்திக்குச் சமமானது.

எழுத்தறிவித்த இறைவன்!

பழுதறக் கல்வி நாம்பெற அருளும்
பகவான் ஆசான் என்றிடுவோம்.
படித்திடும் போதில் காட்டிய வழியில்
பாரினில் என்றும் சென்றிடுவோம்!

விழுதுகள் போலத் தாங்கிடும் கல்வி
விதையினை ஊன்றிப் பயிர்வளர்ப்பார்!
விளைந்திடும் வரையில் சிறுபயிர் நம்மை
வேலியைப் போலக் காத்துநிற்பார்!

எழுத்தறி வித்த இறைவனைப் போற்றி
இருகரம் கூப்பித் துதித்திடுவோம்!
எண்ணும் எழுத்தும் கற்றிடச் செய்த
ஈசனை நெஞ்சில் பதித்திடுவோம்!

நெல்லை ஆ. கணபதி

பாம்பாட்டி

கந்தைத் துணியே உடுத்திருந்தான் — அவன்
கையில் பெட்டியை வைத்திருந்தான் — எம்
சிந்தை களித்திடும் வண்ணமவன் — ஊதும்
சின்ன மகுடியும் கொண்டுவந்தே!

பெட்டியை கீழே வைத்தவுடன் — ஊதல்
பூபூ என்றே ஒலிக்கவிட்டான் — கையால்
தட்ட மூடி விழுந்திடவே — பாம்பும்
தலையைத் தூக்கி ஆடியதே!

ஊதிய மகுடி இன்னிசையில் — பலர்
ஓடிவந்து அங்குக் கூடிவிட்டார் — பாம்பு
பாதி உடலினைத் தூக்கியது — அவன்
பாட்டை நிறுத்தவே தாக்கியது!

தொல்லை எனச்சொல்லி அஞ்சிநின்றோம் — அதைத்
தாக்கிடு வோமெனக் கெஞ்சினந்தோம் — அவன்
பல்லைப் பிடுங்கிட்டேன் பாருமென்றான் — காட்டிப்
பத்துக் காசுகள் தாருமென்றான்!

காசைக் கொடுத்ததும் ஆடவிட்டான் — நாங்கள்
கண்டுகொண் டிருக்கையில் மூடிவிட்டான். — உடன்
ஆசை மிகுதியால் பின்தொடர்ந்தோம் — அவன்
ஆங்காங்கே நின்றாடி முன்நடந்தான்!

இல. தமிழ் அகன்

இம்மைக்குச் செம்மை

வாய்'மை'யும் நேர்'மை'யும்
வாழ்வில் வேண்டும்;
வறு'மை'யிற் செம்'மை'யைக்
காண வேண்டும்;
தாய்'மை'யின் பெரு'மை'யைப்
பேண வேண்டும்;
தன்'மை'சால் தலை'மை'க்கே
பணிய வேண்டும்.

தூய்'மை'யும் தோழ'மை'யும்
தொண்டில் வேண்டும்;
தொன்'மை'யின் வன்'மை'யைப்
போற்ற வேண்டும்;
செய்'மை'போல் அஞ்சா'மை'
செழிக்க வேண்டும்;
செழு'மை'யாம் சினவா'மை'
தழைக்க வேண்டும்.

திற'மை'க்கே தலை'மை'யைத்
தந்து, நாட்டில்
தீ'மை'யைக் கூர்'மை'யாய்
எதிர்க்க வேண்டும்;
பொறு'மை'யாய் மேன்'மை'யை
அடைய எண்ணி,
புல'மை'யில் கட'மை'யை
ஆற்ற வேண்டும்.

நெறியாண்'மை' குறையா'மை'
நெஞ்சில் கொண்டு.
நிலை'மை'யை வலி'மை'யாய்த்
தாங்கி வென்று,
இறையுண்'மை' மறவா'மை'
போற்றி நின்றால்,
இறவா'மை' எனும் நன்'மை'
சேரும் ந'மை'யே!

இ. பாலதண்டபாணி



அம்மா மடி

அம்மா மடிதான் முதல் பள்ளி—அவள்
அணைப்பாள் கொஞ்சிக் கதைசொல்லி.
தொட்டில் தன்னில் நமைத்தள்ளி அவள்
பாடிடத் தூக்கம் வரும் துள்ளி.

குளிக்கச் செய்து அலங்கரிப்பாள்—ஒரு
குறும்பு செய்ய அவள் சிரிப்பாள்.
மழலை இதழில் முத்தம்தான்—அவள்—
மழையாய்ப் பொழிவாள் நித்தம்தான்.

நேர்மை ஒழுக்கம் நெறிசொல்லி—அவள்
பக்கம் சொல்லில் கலைச்செல்வி.
அன்பாய்ப் பாசம் நமக்கள்ளித்—தரும்
அம்மா மடியே முதல் பள்ளி.

- 'யாரோ'



தமிழும் ஆனான்!

கவிதையாம் மலர்கள் பூக்கும்
கற்பகக் கொடியாய் ஓங்கி
புவியெலாம் போற்றும் வண்ணம்
பாரதி கவிஞன் ஆனான்

சுதந்திர தாகம் கூட்டி
சோர்வெனும் பேயை ஓட்டி
புதுயுகம் படைக்கும் ஆற்றல்
பாட்டினால் பொழிந்த வீரன்

சத்தியம் உயிர்மூச் சென்று
சக்தியே தெய்வம் என்று
இத்திருநாடே நல்ல
இதயமாய்க் கொண்ட பக்தன்

வியத்தகு அழகு அன்னை
ஒண்கவி ஆக்கி இன்பம்
பயக்குமோர் விருந்து தந்த
பாரதி தமிழும் ஆனான்!

மயிலை நம்பி

"நீரும் மேகமும்"

வேகமாக அலையெழுப்பும்
கடலின் நீரும் வெய்யிலில்
மேகமாக ஆவியாகி
மெல்லமெல்ல ஊர்ந்திடும்!

காற்று மெல்ல வீசும்போது
குளிர்ந்து மேகம் கீழ்வரும்!
ஊற்றுப்போல நீர் துளிர்த்து
அருவிபோல மழை விழும்!

மேகங்கூடி இடி முழக்கி
மின்னும்போது நீருடன்,
வேகமாக 'நைட்டிரேட்'டும்
விண்ணிறங்கி நிலம்விழும்!

பயிர்செழித்து நிலம் விளைத்துப்
பயன்மிகுந்த நீரெல்லாம்
உயிர் வளர்க்கும் உப்பு நீரின்
கடலடைந்து மீண்டுமே

வேகமாக ஆவியாகி
வானில் கூடி ஊர்ந்திடும்,
மேகமாக இடிமுழக்கி
மின்னி மீண்டும் மழைவரும்!

'சுப்ர பாலன்'




சரணம் கணேசா !



தலையிழந்த இக்குழந்தையின் உடலில் ஒரு மிருகத்தின் தலையைப் பொருத்திவிட்டால், இது மனிதனுமில்லாமல் மிருகமுமில்லாத சிருஷ்டியாகிவிடும்.... இதோ பார்... யாரங்கே?
கைலைக்கு வெளியே வடக்கே தலை வைத்து ஒரு யானை சாகும் தருவாயில் கிடக்கிறது. அதன் தலையைக் கொய்து வாருங்கள்.
பூதகணங்கள் கொண்டு வந்த யானைத் தலையைப் பார்வதி குழந்தையின் உடலில் பொருத்தினாள்.
ஓம்...ம்!
கஜமுகாசுரனைக் கொல்ல வந்துள்ள இந்தக் கஜமுகனே நம் அருமைக் குழந்தை.

கதை: **ஹஸ்தினி** படக்கதை அமைப்பு: **வாண்டுமாமா** சித்திரம்: **விநு,**



லாபோந்தேன் குட்டிக்கதைகள்

தொகுத்தவர்: கு. அழகிரிசாமி

குரங்கின் தீர்ப்பு

ஓநாய் ஒரு நரியைத் திருடன் என்று சந்தேகித்தது. அப்போது ஒரு குரங்கு நீதிபதியாக இருந்தது. எனவே



ஓநாய் குரங்கிடம் வந்து, ''இந்த நரியைத் தண்டிக்க வேண்டும். இது திருட்டு நரி என்று நான் மட்டுமல்ல ஊரே சொல்கிறது. இதை வெளியே விட்டு வைத்தால் என்னுடைய எந்தப் பொருளுமே பாதுகாப்பாக இராது. என்று சொன்னது. பல சட்டங்களையும் மேற்கோள் காட்டித் தன் கட்சியை ஓநாய் வற்புறுத்தியது.

நரியும் தான் நிரபராதி என்று வாதம் புரிந்து பல சட்டங்களைத் தனக்குச் சாதகமாக மேற்கோள் காட்டியது.

வாதப் பிரதிவாதங்கள் வெகு நேரம்வரை ஆவேசமாக நடைபெற்றன. எல்லாவற்றையும் கேட்ட குரங்குக்கு ஒரே குழப்பமாகி விட்டது. கடைசியில் குரங்கு பின் வருமாறு தீர்ப்புக் கூறியது.

''நீங்கள் இருவரும் எப்படிப் பட்டவர்கள் என்று எனக்குத் தெரியும். ஓநாயே! நீ ஆதாரமில்லாமல் குற்றஞ் சாட்டியதற்காக உனக்கு அபராதம் விதிக்கிறேன். ஏ நரியே! அந்தக் குற்றச்சாட்டின்படி நீ திருடனாக இருப்பதால் உனக்கும் அபராதம் விதிக்கிறேன்.''

கிழட்டுச் சிங்கம்

ஒரு காலத்தில் ஒரு காட்டிலுள்ள அத்தனை மிருகங்களையும் நடுநடுங்க வைத்துக் கொண்டிருந்தது ஒரு சிங்கம். அதற்கு வயதாகித் தள்ளாமை வந்து விட்டது. நடக்கவும் சக்தியில்லாமல் அது படுத்துக் கிடந்தபோது, ஒரு காலத்தில் பயந்து கொண்டிருந்த மிருகங்களெல்லாம் வந்து அதைத் தாக்க ஆரம்பித்து விட்டன. ஒரு குதிரை வந்தது. சிங்கத்தை ஒரு உதை உதைத்து விட்டுப்போனது. ஒரு ஓநாய் வந்தது; ஒரு கடிகடித்து விட்டுப் போனது; ஒரு மாடு வந்தது ஒரு முட்டு முட்டிவிட்டுப் போனது.




சிங்கத்திற்கு ஒரே ஆத்திரம். ஆனால் எதுவும் செய்ய முடியாமல் உள்ளுக்குள் குமுறிக் கொண்டு கிடந்தது. கடைசியில் ஒரு கழுதை வந்தது. அதுவும் சிங்கத்தைக் காலால் உதைத்தது.

ஆத்திரமும் மனவேதனையும் தாங்காமல், ''கழுதையே! நான் சாவதைப் பற்றிக்கூடக் கவலைப் படவில்லை. ஆனால் இருந்திருந்தும் உன்னிடம் உதை வாங்குவது எனக்கு இரட்டைச் சாவாக இருக்கிறது'' என்று சொல்லிற்று சிங்கம்.

இரண்டு சேவல்கள்

இரண்டு சேவல்கள் ஒற்றுமையோடு வாழ்ந்து வந்தன. ஒருநாள் ஒரு பெட்டைக் கோழி அங்கே வந்தது. கோழி யாருக்குச் சொந்தமாவது என்பதில் சேவல்களுக்கிடையே சண்டை மூண்டு விட்டது. போர் வெகுநேரம் ஆக்ரோஷமாக நடைபெற்றது. எத்தனையோ கோழிகள் போரைப் பார்ப்பதற்காக வந்து கூடி விட்டன. கடைசியில் ஒரு சேவல் தோற்றுப் போய்த் தன் கூண்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டது. வெற்றி பெற்ற சேவல் அத்தனை பெட்டைக் கோழிகளையும் சொந்தமாக்கிக் கொண்டு வெற்றிப் பெருமிதத்தில் ஒரு கூரை மீது ஏறிக் கூவியது. அதைக் கேட்டு ஒரு கழுகு வந்தது. அந்தச் சேவலை கொத்தித் தூக்கி கொண்டு போய்விட்டது. இதைப் பார்த்து, ஓடி ஒளிந்த சேவல் திரும்பவும் வந்து பெட்டைக் கோழிகளைத் தனக்குச் சொந்மாக்கிக் கொண்டது.



வெற்றி பெற்று விட்டோம் என்ற அகம்பாவம் தலைக்கேறினால் விதி இப்படித்தான் தண்டிக்கும்.

சேவலும் பூனையும்

ஒரு சிறு எலிக்குக்குஞ்சு ஒருநாள் தாயிடம் பின்வருமாறு சொன்னது: ''இன்று நான் இரண்டு மிருகங்களைப் பார்த்தேன். ஒரு மிருகம், பயங்கரமாக இருந்தது. மற்றொன்று




மிகவும் சாது. பயங்கரமான மிருகத்திற்குத் தலையில் கொண்டை இருக்கிறது. சிறகை அடிக்கிறது. அவ்வப்போது கூவுகிறது. அதைக் கேட்டதும் நான் பயந்து ஓடிவந்து விட்டேன். இந்த மிருகம் அங்கே இல்லாதிருந்தால், அந்தச் சாது மிருகத்தினிடம் நான் போயிருப்பேன்; சிநேகம் பண்ணியிருப்பேன். அதன் உடம்பு நம் உடம்பைப் போல் மிருதுவாக இருக்கிறது. உடம்பில் கோடுகள் இருக்கின்றன. அதற்கு நீளமான வால் இருக்கிறது. அதன் பக்கத்தில் நான் போய்க் கொண்டிருக்கும்போதுதான் இந்த மிருகம் கூவியது. நான் பயந்து ஓடிவந்து விட்டேன்.''

குஞ்சு சொல்வதை நன்றாகக் கேட்டுக் கொண்ட அம்மா எலி சொன்னது: ''நல்ல வேளையாக நீ ஓடிவந்தாயே! குழந்தாய், நீ சாது மிருகம் என்று சொன்னாயே அது உண்மையில் சாதுவல்ல. கபடமான பிராணி. அது நம் கூட்டத்திற்குப் பரம விரோதியான பூனையாகும். மற்றொரு மிருகத்தைப்பற்றிச் சொன்னாய்; ஆனால் அது மிருகமல்ல; பறவை. சேவல் என்று பெயர். அது

நமக்கு ஒரு தீங்கும் செய்யாது. இனி மேல் நீ வெளித் தோற்றத்தைப் பார்த்து யாரைப் பற்றியும் முடிவு கட்டி விடாதே!''

போருக்குப் புறப்பட்ட சிங்கம்

ஒரு சிங்கம் போருக்குப் புறப் பட்டது. அப்போது ஒவ்வொரு மிருக திற்கும் அது கட்டளை இட்டது.



''யானையே! நீ உன் முதுகில் யுத்தத் தளவாடங்களைச் சுமந்து வர வேண்டும். எதிரிகளையும் நீ தாக்க வேண்டும்.

''கரடியே! நீ எதிரிகளைச் சூறை யாடுவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

''நரியே! நீ போர்த் தந்திரங்களை யெல்லாம் கற்றுத்தர வேண்டும்.

''குரங்கே! நீ எதிரிகளுக்கு விளை யாட்டுக் காட்டி அவர்கள் கவ னத்தை வேறு பக்கம் திருப்ப வேண்டும்.''

சிங்கம் இப்படி உத்தரவு போட்டுக் கொண்டிருந்த போது ஒரு மிருகம் அதைப் பார்த்து, ''நமது படையில் கழுதைகளையும் முயல்களையும் சேர்க்க வேண்டாம். கழுதைகளுக்கு மூளை கிடையாது; முயல்களோ மகா கோழை கள்'' என்று சொன்னது.

அதைக் கேட்ட சிங்கம், ''இல்லை, இல்லை. நான் எல்லாப் பிராணி களையுமே பயன்படுத்துவேன். கழுதை எதிரிகள் நடுங்கும்படி எக்காள நாதம் செய்யட்டும்; அதிவேகமாக ஓடக் கூடிய முயல் போர்க்களத்திலிருந்து நான் அனுப்பும் உத்தரவுகளைச் சுமந்து வரட்டும்'' என்று கூறியது.

புத்திசாலியாயிருப்பவன் எதையும் பயன்படுத்திக் கொள்வான்.



போகுது பார் வேகமாய் பொம்மைக் கார் வாகனம்

★

மேனாட்டில் குழந்தைகளை மகிழ் விப்பதற்குத்தான் என்னென்ன செய்கிறார்கள் பாருங்கள்! இதோ அருகில் உள்ள பொம்மை மோட் டாருக்கு 'மைரேஜ்' என்று பெயர் ஃபைபர் கிளாஸ்' என்ற உடைக்க முடியாத ரசாயனப் பொருளினால் ஆனது இதன் உடல். பெட்ரோ லினால் ஓடக்கூடிய குட்டி எஞ்சின் பொருத்தப் பட்டிருக்கிறது. மணிக்கு 25 மைல் வேகம் போகக் கூடியது. நிஜ மோட்டாரைப் போலவே ப்ரேக், வளைவுகளில் திருப்ப, இப்படி எல்லா வசதிகளும் பாதுகாப்பும் கூடியது. இங்கி லாந்தில் தயாரிக்கப்பட்டுள்ள இந் தக் காருக்கு உலகச் சந்தையில் ஏகக் கிராக்கியாம். இருக்காதா பின்னே? அந்தப் பையன் சொகு சாக அமர்ந்து ஓட்டும் ஒய்யாரத் தைப் பார்த்தாலே உங்களுக்கும் ஆசையாய்த்தானே இருக்கிறது!

ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள்

ஹாம்லெட்

கிருஷ்ணவேணி





ஆவியாக வந்த தந்தையிடம், அவரைக் கொலை செய்ததற்குப் பழி வாங்குவதாக வாக்களித்து விட்டாலும் அதை எப்படி நிறைவேற்றப் போகிறோம் என்பதில் குழப்பமடைந்தான் ஹாம்லெட். 'தன் தந்தையைக் கொன்றது சித்தப்பா தான்' என்று குற்றம் சாட்டுவதற்குப் போதுமான ஆதாரங்கள் ஏதுமில்லை. ஆகவே தக்க தருணம் வரும் வரை காத்திருக்க வேண்டும். அதுவரை ஒரு பைத்தியம் போல் நடிப்பதென்று முடிவு செய்து கொண்டான். தந்தையின் மறைவிற்கு பிறகு அந்த இழப்பினால் ஹாம்லெட் வெகுவாக மாறிப் போயிருந்தான். ஆகவே இப்போது சித்த சுவாதீனமில்லாதவனாக நடிப்பதில் கஷ்டமேதுமிருக்கப் போவதில்லை. காரணமில்லாமல் கண்டவர்மேல் எரிந்து விழலானான். சித்தப்பாவை மணந்து கொண்டதற்காகத் தாயின் மீது; காதலி ஒபீலியாவிடமும் தன் எரிச்சலைக் காட்டினான். இந்தத் திடீர் மாற்றம் ஒபீலியாவைப் பெரிதும் பாதித்தது. அவள் அவனை உளமார நேசித்தாள். காதலனின் கண்ணியக் குறைவான போக்குக்குக் காரணம் தெரியாமல் கலங்கினாள் ஒபீலியா.

அரண்மனையில் அனேகமாக எல்லோருமே ஹாம்லெட்டுக்குப் புத்தி பேதலித்து விட்டதாகவே நம்பினார்கள். ஆனால் ஒருசிலர் நம்பத் தயாராக இல்லை. அவனது இத்தகைய செயல்களுக்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று நினைத்தார்கள். ஒபீலியாவின் தகப்பனார் **போலோனியஸ்**, ஹாம்லெட் தன் மகளின் காதலை ஏற்று அதற்குப் பிரதியாகத் தன் காதலை வெளிப்படுத்த முடியாததினால்தான் இப்படிக் குணம் கெட்டுப் போயிருப்பதாக எண்ணினார். க்ளாடியஸும், ஹாம்லெட்டின் தாயாரும் வேறு மாதிரி நினைத்தார்கள். ஹாம்லெட்டுக்குப் பைத்தியமில்லை. ஏதோ ஒரு முக்கியமான விஷயம்தான் அவன் சிந்தையைக் குழப்பிக் கொண்டிருக்கிறது. அப்படி அவனை வெறியனுக்கும் அந்த விஷயம் என்ன என்பதை அறிந்து கொள்ளத் தீர்மானித்தான் க்ளாடியஸ். இதற்கு ஹாம்லெட்டின் பள்ளித் தோழர்களான **ரோஸன் கிராண்ட்ஸ், கில்டன் ஸ்டர்ன்** இருவரின் உதவியையும் நாடினான். அரண்மனையில் தன் தோழர்களின் வருகை ஹாம்லெட்டுக்குச் சந்தேகத்தை உண்டாக்கியது. தன்னைக் கண்காணிக்க, க்ளாடியஸ் இவர்களை நியமித்திருக்கிறானோ என்ற ஐயம் ஏற்பட்டது ஹாம்லெட்டுக்கு.

'எல்ஸினூர் கோட்டைக்கு எதற்காக இந்தத் திடீர் விஜயம்?' என்று தன் நண்பர்களைக் கேட்டான் ஹாம்லெட். ஆனால் முதலில் அவர்களிடமிருந்து







நேரான பதில் வரவில்லை. தன் நட்பின் ஆழத்தையும் அழுத்தத்தையும் அவர்களுக்கு உணர்த்தி வற்புறுத்திய பிறகு அவர்கள் ஹாம்லெட்டிடம் தாங்கள் அங்கு வந்ததற்கான உண்மைக் காரணத்தைச் சொன்னார்கள். 'தங்களை இங்கு வந்து சில காலம் தங்கி இருக்கும்படி கேட்டுக் கொண்டது க்ளாடியஸ் தானென்றும் அவனுடைய விசித்திரமான நடவடிக்கைகளுக்கான காரணத்தை அறிந்து சொல்லுமாறு அரசர் தங்களிடம் கேட்டுக் கொண்டதாகவும் கூறினார்கள்.

''மன்னரும், உன் தாயாரும் உன்னைப் பற்றி மிகவும் கவலைப்படுகிறார்கள்'' என்றார்கள் நண்பர்கள் இருவரும்.

''என்னுடைய இந்த நிலைக்குக் காரணம், ஆண், அல்லது பெண் இவர்களின் நட்பினால் எவ்வித இன்பத்தையும் என்னால் உணர முடியவில்லை. மனநிம்மதியையும் மகிழ்ச்சியையும் நான் இழந்து விட்டதாக அவர்களிடம் சொல்லுங்கள்'' என்றான் ஹாம்லெட். இதைக்கேட்ட ரோஸன் கிராண்ட்ஸ் சிரித்தான். ''வரும் வழியில் நாங்கள் ஒரு நாடகக் கோஷ்டியைச் சந்தித்தோம். அவர்களும் இந்த அரண்மனையை நாடித்தான் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நடிப்பைப் பார்த்தாயானால் உன் மனக்கலக்கமெல்லாம் மறையலாம்'' என்றான். ஆனால் ஹாம்லெட்டினுடைய நண்பனின் இந்த யோசனை தவறானதாக முடிந்தது.

நாடகக் குழுவினரின் வருகை ஹாம்லெட்டுக்கு ஓர் புதிய எண்ணத்தைத் தோற்றுவித்தது. அவர்களில் முக்கிய பாத்திரமேற்று நடிக்கும் ஒரு நடிகனைத் தனியே அழைத்துப் போனான். அவர்கள் நடிக்க இருந்த நாடகங்களில் **'கான்சாகோவின் கொலை'** என்ற நாடகத்தை மறுநாள் நடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். அத்துடன் அந்நாடக வசனத்தில் தான் எழுதித் தரும் சில வரிகளையும் சேர்த்துக் கொண்டு நடிக்க வேண்டும் என்றும் கூறினான். நாடகக் குழுவினர் இளவரசனின் விருப்பத்துக்கு இணங்கினார்கள்.

நாடகத்தில் வரும் கொலைக் காட்சியைப் போலவே தன் தகப்பனாரின் கொலையும் நடந்திருப்பதை அறிந்த ஹாம்லெட்; நாடகத்தின் முக்கிய கதா பாத்திரம் பேசும்படியாகச் சில வரிகளை எழுதிக் கொடுத்திருந்தான். அந்த வசனம் பேசப்படும் போது, தன் தந்தையைக் கொன்றது க்ளாடியஸ்தான் என்பது தனக்குத் தெரியும் என்பதைக் க்ளாடியஸுக்கு உணர்த்தும் என்று நம்பினான் ஹாம்லெட். பழிவாங்குமுன் தனது சித்தப்பாதான் குற்றவாளி என்பதற்கான ஆதாரங்கள் அவனுக்குத் தேவையா







யிருந்தன. நாடகத்தின் போது க்ளாடியஸை உன்னிப்பாகக் கவனித்தால் அவனது உணர்ச்சிகள் அவனைக் காட்டிக் கொடுத்து விடும் என்றும் நம்பினான்.

இதே சமயத்தில் க்ளாடியஸின் எண்ணங்கள் வேறு வகையாக இருந்தன. தனக்கும் தன்னுடைய அரச பதவிக்கும் ஏதோ ஒருவகையில் ஹாம்லெட்டினால் அபாயமிருக்கிறது என்ற உணர்வு ஏற்பட்டிருந்தது. ஆனால் அது எந்த வகையில்? அதை அவனால் சொல்ல இயலவில்லை.

மறுநாள் மாலை ஹாம்லெட் வழக்கத்துக்கு மாறாக உத்ஸாகமாகவும் சுமுகமாகவும் காணப்பட்டான். நாடகம் ஆரம்பமாவதை எதிர்பார்த்து அரண்மனை முற்றத்தில் எல்லாரும் கூடி இருந்தார்கள். தன்னுடைய திட்டத்தைப் பற்றி ஹாம்லெட் ஒரே ஒரு நபரிடம்தான் கூறி இருந்தான். அது ஹொரேஷியோ. தோட்டத்தில் நிகழும் கொலைக் காட்சியின் போது க்ளாடியஸின் முகபாவங்களைக் கவனமாக நோக்கும்படியும் ஹொரேஷியோவிடம் கூறி இருந்தான்.

ஹாம்லெட் விரித்திருந்த வலையைப் பற்றி அறியாத க்ளாடியஸ் அன்று மாலை மகிழ்ச்சி நிறைந்த மனத்துடன் நாடகத்துக்கு வந்திருந்தான். ஆனால் நாடகத்தின் காட்சிகள் முன்னேறிக் கொண்டிருக்கும் போது அவனால் அமைதியாக அமர்ந்திருக்க முடியவில்லை. எதை அவன் மறக்க முயன்று கொண்டிருந்தானோ அவையெல்லாம் அந்த நாடகத்தின் காட்சிகளாக விரிந்து கொண்டிருந்தன. அவன் நாடகத்தை மேலே நடக்க விடாமல் செய்ய ஏதாவது காரணம் கிடைக்காதா என்ற நோக்கத்தில் தன் அருகே அமர்ந்திருந்த ஹாம்லெட்டிடம் ''இந்த நாடகத்தில் விரும்பத்தகாததாக ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டான். ''ஏதுமில்லை'' என்ற ஹாம்லெட், க்ளாடியஸை ஊடுருவும் தன் கண்களால் உறுத்துப் பார்த்தான். அவன் பார்வையின் தகிப்பைத் தாங்க முடியாத க்ளாடியஸ் முகத்தைத் திருப்பிக் கொண்டான். நாடகம் நடந்து கொண்டிருந்தது. க்ளாடியஸ் நாடகத்தைத் தொடர்ந்து பார்க்க வேண்டிய சூழ்நிலையில் அமர்ந்திருந்தான். நாடகக் கதாநாயகன் கான்ஸாகோ தோட்டத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறான். கொலையாளி லூஸியானஸ் ஓசைப்படாமல் தூங்குபவனின் பின்னால் வந்து அவனது காதில் விஷத்தை ஊற்றுகிறான். — ஹாம்லெட்டின் தகப்பனாரை க்ளாடியஸ் எப்படிக் கொன்றானோ அதே முறையில். வெற்றிக் குதூகலத்துடன் ஹாம்லெட் முணுமுணுத்தான். ''இதோ இவனை விஷமிட்டுக் கொன்றாகி விட்டது. அடுத்து,








கான்ஸாகாவின் மனைவியையும் தன தாக்கிக் கொள்ளப் போகிறான் என்பதைக் காணப் போகிறீர்கள்'' ஹாம்லெட் குதூகலமாகக் கொக்க ரிப்பதைக் கேட்ட க்ளாடியஸ், குற்ற வாளி மனப்பான்மையும் பீதியும் தாங்க முடியாத நிலையில் தன் முகத்தை இருகைகளாலும் மூடிக்கொண்டான்.

அமைதியைக் குலைக்கும் அளவுக்கு — உண்மைக்கு வெகு அருகே கொண்டு போகப் பட்டுவிட்டான் க்ளாடியஸ். திடீரென்று தன் இருக்கையிலிருந்து எழுந்தவன் ''விளக்கு, விளக்கு! வெளிச் சம், வெளிச்சம்!'' என்று கத்தினான். ஒதுங்கி நின்ற தீவட்டி தாங்கிகள் ஓடோடி வந்தார்கள் மன்னனின் அருகே. குழுமியிருந்த நாடகம் பார்ப் போர் திகைக்க, நாடக நடிகர் களுக்கு வியப்பு மே ம லி ட, நாடக அரங்கிலிருந்து மன்னர் வெளி யேறினார். ''பார்த்தாயா, என் சித் தப்பா எப்படித் தடுமாறிப்போனார் என்பதை?'' என்று கேட்டான் ஹாம் லெட் ஹொரேஷியோவிடம். ''தோட் டத்தில் கான்சாகோ தூங்கிக் கொண் டிருக்கும் போது கொலைகாரன் அவன் பின்னால் பதுங்கி வரும் சமயம் க்ளாடி யஸின் முகத்தில் அந்தக் குற்றவாளி மனப்பான்மை எப்படிப் பளிச்சிட்டது பார்த்தாயா?'' ஒரு கொலை மற்றொரு கொலையினால் ஈடுசெய்யப் படுமானால், இப்போது தன் தந்தைக்குத் தான் வாக்களித்தபடி பழி வாங்குவதற்குப் போதுமான சாட்சிப் பிரமாணம் கிடைத்து விட்டதாகக் கருதினான் ஹாம் லெட். இப்போது அவனுக்குத் தேவை யானதெல்லாம் பழி தீர்த்துக் கொள்ளு வதற்கு ஏற்ற சந்தர்ப்பம். அதுவும் கூடிய விரைவிலேயே வாய்க்கும் என்று நம்பினான். இப்படி ஹாம்லெட் சிந்தனை வயப்பட்டிருக்கும் போது தாயார் அழைப்பதாகச் செய்தி வந்தது.

நாடக அரங்கிலிருந்து தாயாரைச் சந்திக்கக் கிளம்பினான் ஹாம்லெட். மன்னரின் அந்தரங்கப் பிரார்த்தனைக் கூடத்தைத் தாண்டித்தான் அவன் போயாக வேண்டும். அன்றுமாலை நிகழ்ச்சிகளால் நிலைகுலைந்து போய், மனச்சாட்சியின் உறுத்தலைத் தாங்க முடியாது மன அமைதி வேண்டி முழந்தாளிட்டுப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தான் க்ளாடியஸ். இது போன்றதோர் சந்தர்ப்பம்தான் ஹாம் லெட்டுக்குத் தேவை. ஓசையின்றிச் சித்தப்பாவின் பின்னால் வந்து நின்றான் ஹாம்லெட். இடையிலிருந்த வாளை உருவினான். பிரார்த்தனையில் ஈடுபட் டிருக்கும் மனிதனின் முதுகிலே அந்த வாளைப் பதிக்கத் தயாரானான். பழி வாங்கும் வெறி அவன் கைப்பிடியின் முஷ்டியை உறுதியாக்கி இறுக்கிற்று. அதன் உந்துதலை ஏற்று முடிக்க உறுதி கொண்டான். **(இன்னும் வரும்)**





விளையும் பயிர்


இருடன்: (மகனிடம்) ரயிலில் போகும் போது அவசியம் ஏற்பட்டால்தான் சங்கிலியை இழுக்க வேண்டும்.
மகன்: யார் சங்கிலியை அப்பா?


—கடையம் இதயா.

கேள்வி ஒன்று; பதில் இரண்டு

குழந்தை: உலகிலேயே மிக நீளமானது எது தெரியுமா?
அம்மா: உங்க அப்பாவின் நாக்கு
அப்பா: தப்பு. உங்கம்மாவின் நாக்கு.

—வைதேகி.





பத்தியம்


முதல் பைத்தியம்: மூட்டைப் பூச்சிகளை எதற்காகத் தின்கிறாய்?
2ம்பைத்தியம்: டாக்டர்தான் இரத்த புஷ்டியாக எதையாவது சாப்பிடச் சொன்னார்.

-கா. பா. துரை.

பலசரக்கு

பல்டாக்டர்: நம்ம வீட்டுக்கு வர பேஷண்டுகளுக்குத்தான் பல் சொத்தைன்னு வர கறிகாய்களும் சொத்தையா வரதே!

—லலிதா செல்லப்பா.





கரைவது கேட்கின்!


ஆசிரியர்: காகம் கரையும்... சொல்லு.
மணி: தப்பு சார்... சோப்புதான் கரையும்.

—எஸ். பிரகாஷ்.

இரு இரு...டன்!

இருடன்: தம்பி உங்க வீட்ல நிறைய நகை இருக்கா?
பையன்: ஓ! இருக்கே.
இருடன்: வீடு எங்கே இருக்கு?
பையன்: புளிய மரத்துக்கு எதிரே.
இருடன்: புளியமரம் எங்கே இருக்கு?
பையன்: வீட்டுக்கு எதிரே.
இருடன்: இரண்டும் எங்கே இருக்கு?
பையன்: எதிரும் புதிருமா?...
இருடன்: ? ? ?

—சந்துரு.



நிலா சிரித்தது

7. இன்பம்

எஸ். சியாமளா

பானுவைத் தான் அலட்சியப்படுத்தியதை எண்ணி இந்துவுக்கு வெட்கம் உண்டாயிற்று. ஒரு முழு கிராமமே பானுவுக்கு அன்புச் சொத்தாகஇருக்கும் போது இந்துவின் அலட்சியத்தினால் என்ன நஷ்டமாகிவிடும்? அப்போது பானு அதற்காக கோபமோ அலட்சியமோ கொள்ளாமல் தன் அன்பைப் பெற எப்படியெல்லாம் நடந்து கொண்டாள் என்பதை நினைவுகூர்ந்து இந்து வருத்தமடைந்தாள். பலவிதமான உணர்ச்சிகளோடு எல்லோரும் கிராமத்தைவிட்டுக் கிளம்பினார்கள். அத்தனை பேருடைய கண்ணீரை, ஆசிர்வாதத்தை, அன்பை, ஆதரவை, கருணையைச் சுமக்க முடியாமல் தன் பிஞ்சு மனத்தில் சுமந்தபடி பானு காரில் ஏறினாள். இந்துவையும் கார்த்திக்கையும் அணைத்து முத்தமிட்டனர் பெண்கள். காரும் கிளம்பியது. இந்துவின் மனதில் மின்னலென ஒரு எண்ணம் ஓடியது.

பானுவுக்கு பெற்றோர் இல்லை. ஆதரவில்லாத சின்னப்பெண். இதனால் எல்லோரும் அன்பு செலுத்துகிறார்களோ?.. இருக்காது.. இந்துவுக்கு அவளுடைய பள்ளித் தோழி சாரதாவின் நினைவு வந்தது. சாரதாவும் முதல் வருஷம் ஒரு பஸ் விபத்தில் பெற்றோரை இழந்து விட்டாள். அந்த நேரத்தில் சிலர் அவளுக்காக வருந்தினார்கள். அதற்குப் பிறகு?.. சாரதா அத்தை வீட்டிலே தான் வளருகிறாள். அந்த வீட்டாரும் அவளிடம் அத்தனை அன்பு பாராட்டவில்லை. சாரதாவும் எப்போதும் அவர்களைக் குற்றம் குறை கூறுகிறாள். சாரதாவின் அப்பா அவளுக்கு நிறையப் பணம் வைத்திருக்கிறார். ஆனாலும் அதற்கு மதிப்பில்லையே ஏன்? ஏன்?

இந்துவின் கூடப்படிக்கும் மாணவி மோகனா. அவளுக்கும் பெற்றோர் இல்லை. பணமும் இல்லை. சித்தப்பாவும் சித்தியும் நல்லவர்களாகத் தான் தெரிகிறது. ஆனாலும் மோகனா சந்தோஷமாக இல்லை. அவளுக்குத் திருட்டுக் குணம் உண்டு. சித்தி கண்டிப்பாள். பள்ளியில் யாருக்குமே மோகனாவைப் பிடிக்காது.. ஏன், ஏன்? இந்து யோசித்தாள். பானுவை அடிக்கடி கவனித்தாள். ஒன்றும் புரியவில்லை.

அரையாண்டுப் பரீக்ஷை நெருங்கி வந்தது. படிப்பில் கவனம் செலுத்தினார்கள். பரீக்ஷையும் நன்றாக எழுதினார்கள். மார்கழி மாத பஜனைக் கூட்டம் விடியற்காலை நேரத்தில் தெருவில் போவதையும் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களை கோயில்களில் ஒலி பரப்புவதையும் பானு வெகுவாக ரசித்தாள். கிறிஸ்துமஸ் லீவில் சென்னையில் பல இடங்களுக்குச் சொர்ணம் குழந்தைகளை அழைத்துப் போய்வந்தாள்.

பொங்கல் திருநாள் வந்தது. ஆனாலும் வாகீசனும் சொர்ணமும் பானுவின் தாய் இறந்த வருஷமாதலால் தீபாவளியையும் விமரிசையாகக் கொண்டாட இஷ்டப் படவில்லை. இருந்தாலும் குழந்தையின் துயரத்தை அதிகப் படுத்துவதும் கூடாதென்ற எண்ணத்தினால் தீபாவளி சமயத்தில் கிராமத்துக்குப் போய் வந்தார்கள். பொங்கல் லீவில் பிக்னிக் போவது போல மகாபலிபுரம் போய் வந்தனர்.

பானு உற்சாகமாகத்தான் இருந்தாள். ஆனாலும் அவள் மனத்தில் ஏக்கம் படர்ந்தது. முன்போல இந்து அத்தனை அலட்சியமாக நடந்து கொள்ளவில்லையே தவிர ஒட்டிப் பழகவும் இல்லை. வீட்டில் அத்தனை பேரும், பள்ளியில் அத்தனை மாணவிகளும் பானுவிடம் பழகுகிறார்கள். அவளோ இந்துவின் அன்புக்கு ஏங்கினாள். பாவம் இந்து. அவளுக்கும் பானுவை கொஞ்சம் கொஞ்சமாகப் பிடித்து வந்தது. பானுவின் நல்ல குணங்கள் அவளைக் கவர்ந்தன. ஆயினும் நெருங்கத்தயங்கினாள். சங்கோசத்தினாலா.. வெட்கத்தினாலா... அல்லது சுய கௌரவத்தினாலா...? அவளுக்கே புரியவில்லை. நாட்கள் ஓடின.

சின்னஞ்சிறு மனம் எத்தனை சமாளித்தாலும் தாங்குமா? பானு ஒரு நாள் மனச்சோர்வுடன் படுத்தாள்.

''அம்மா.. அம்மா.. பானுக்காவுக்கு ஜுரம்; உடம்பு சுடறதும்மா.. வந்து பாரேன்..'' கார்த்திக் பரபரப்புடன் ஓடிவந்து அம்மாவிடம் சொன்னான். சொர்ணம் பதற்றமடைந்தாள். பானுவின் அறைக்குச் சென்று பார்த்தாள். வாடிய மலர்போல பானு துவண்டு படுத்திருந்தாள். ''என்னம்மா பானு.... உடம்பை வலிக்குதா.'' பரிவுடன் அவள் நெற்றியைத் தொட்ட சொர்ணம், ''அடடா அனலாகக் கொதிக்கிறதே.. டாக்டரை அழைக்கச் சொல்லுகிறேன்..'' என கீழே வேகமாக வந்தாள். செய்தித்தாளைப் புரட்டிக்கொண்டிருந்த வாகீசன் சொர்ணம் சொன்ன செய்தியைக் கேட்டு மாடிக்கு விரைந்தார். சில நிமிஷங்களில் டாக்டருக்குப் போன் பண்ணி வரவழைத்தார்.



டாக்டர் வந்து பார்த்து ''பயம் ஒன்றுமில்லை.. சாதாரண ஜுரம் தான்,..'' என்று சொல்லிவிட்டுப் போனார். இரண்டு நாட்கள் சென்றன. ஜுரம் இறங்கவில்லை. டாக்டர் மருந்தை மாற்றிக் கொடுத்தார். சுந்தரி சமையல் அறையில் வேலை செய்யவே மனமின்றி, பழக்கம் காரணமாக கைகள் வேலைசெய்ய, அடிக்கடி மாடிக்கு ஓடிப் பானுவை பார்த்து வந்தாள்..

சொர்ணம் வேளைக்கு மருந்தைத் தவறாமல் கொடுத்தாள். வாகீசன் ஆபீஸுக்குப் போனாலும் அடிக்கடி வீட்டுக்குப் போன் செய்து விசாரித்துக் கொண்டிருந்தார். கார்த்திக் பள்ளிக்கூடம் போக இஷ்டப்படவில்லை. ஆனாலும் வீட்டிலும் பானுவோடு விளையாட, பேச முடியவில்லையே. அதனால் மனமின்றிப் பள்ளிக்குப் போய் வந்தான். ஒவ்வொரு நாளும் மாலை வந்ததும் ஓடிப்போய் பானுவிடம் நிற்பான். அவளிடம் ''பானுக்கா... ஜுரம் சரியாப் போச்சா...? கஞ்சி குடிச்சியா...? உனக்கு பிஸ்கட் தரட்டுமா...?'' என்றெல்லாம் கேட்டுவிட்டுத்தான் கீழே இறங்குவான். பொன்னி பானுவுக்கு உடைகளை மாற்றி விடுவாள். படுக்கையைத் தட்டிப் போடுவாள். உடம்பைத் துடைத்து விடுவாள். கபாலியும் பானுவின் தோழிகளும் ''பானுவுக்கு உடம்பு எப்படியிருக்கு, தேவலையா?'' என்று இந்துவிடமும் பொன்னியிடமும் அடிக்கடி கேட்டுச் சென்றார்கள். நாலைந்து மாதங்களிலேயே பானு இவர்களை எப்படிக் கவர்ந்திருக்கிறாள்..? என்று இந்து வியந்தாள்.

• • •

இந்துவின் மனம் வேதனைப்பட்டது. பானுவின் அறைக்கு வெளியிலிருந்தே பார்த்து விட்டுத் திரும்புவாள்.

சுந்தரி மாமியிடம் ''மாமி! இன்னைக்குப் பானு கஞ்சி குடிச்சாளா, மருந்து சாப்பிட்டாளா...? டாக்டர் வந்தாரா...? என்ன சொன்னார்...?'' என்றெல்லாம் விசாரித்துத் தெரிந்து கொள்வாள். ஜுரம் கொஞ்சம் தணிவதும் பிறகு திடீரென்று அதிகமாவதுமாக மேலும் இரண்டு மூன்று நாட்கள் சென்றன. பானு சுந்தரியிடமும் பொன்னியிடமும் ஏதாவது பேசத் தொடங்கினால் அவர்கள், ''பானு! உடம்பை அலட்டிக்கக் கூடாதம்மா. பேசாம படுத்துத் தூங்கம்மா..'' என்பார்கள், அதனால் அவள் அவர்களிடம் எதுவும் பேசுவதில்லை. கார்த்திக் வரும்போது மட்டும் பேசுவாள்.

அன்று பகல் பானுவுக்கு ஜுரம் அதிகமாக இருந்தது. அன்ன ஆகாரமின்றித் துவண்டு கிடந்தாள். கார்த்திக் வழக்கம்போல மாலையில் அவள் அருகில் வந்தான். ''கார்த்தீ...!'' மெதுவாகக் கண்களை விழித்துப் பார்த்தாள் ''பானுக்கா! இன்னைக்கு உங்க கிளாஸ் பெண்ணுங்க எல்லாரும் பானு எப்ப ஸ்கூலுக்கு வருவான்னு கேட்டாங்க. இன்னும் இரண்டு மூணு நாள் கழிச்சு வருவான்'ன்னு சொன்னேன்...?'' என்றான்.

''அது சரி. கார்த்தீ! இந்து ஸ்கூல் போகலையா...?'' விசாரித்தாள்.


''போறாளே... ஆனா சாயந்திரம் அவள் ப்ரீதா, கலாவோட விளையாடறதில்லே. கோயிலுக்குப் போறாள். ப்ரீதா சொன்னா, அவா மூணுபேரும் சாமி கிட்டே வேண்டிக்கிறாளாம், உனக்கு ஜுரம் தேவலையாகணுமின்னு. ...பானுக்கா! நான்கூட சாமிகிட்டே வேண்டிக்கப் போறேன்...'' என்றான் கொஞ்சலாக.

சோர்ந்து வரண்டிருந்த பானுவின் முகம் லேசாக மலர்ந்தது. விழிகளில் மகிழ்ச்சி தேங்கியது. ''அப்படியா..?'' என்றாள். கார்த்திக் ஓடிவிட்டான். பானுவின் கண்கள் ஜுரவேகத்தில் மூடிக்கொண்டன. அவள் இந்துவைப் பற்றி யோசித்தாள். இந்து பானுவுக்காக கடவுளை வேண்டுகிறாள்! அவளுக்குப் பானுவிடம் அன்பு இருக்கிறதா? அறைவாசலில் நிழலாடியது. லேசாகக் கண்களைத் திறந்தவள் இந்து தயங்கித் தயங்கி, அறைக்குள் வருவதைக் கண்டு தூங்குவது போலக் கண்களை மூடிக் கொண்டாள். இந்து கட்டில் அருகில் வந்து தன் தளிர்க் கையால் பானுவின் நெற்றியை, கன்னத்தைத் தொட்டுப் பார்த்தாள். பானுவுக்கு மெய் சிலிர்த்தது. இந்து நெற்றியில் எதையோ பூசினாள். வாசனையிலிருந்து அது விபூதி என்று புரிந்து கொண்டாள். சில வினாடிகள் சென்றன. இந்து கலைந்து கிடந்த போர்வையைப் போர்த்தி விட்டாள். ஓரக்கண்ணால் அவள் போவதைப் பானு கவனித்தாள். அந்தச் சின்ன உள்ளம் ஆனந்தத்தில் குதூகலித்தது. இரண்டு நாட்களாக விபூதி வாசனை தெரிந்தது. சுந்தரி மாமி இட்டிருப்பா என்று பானு நினைத்திருந்தாள். இப்போது உண்மை விளங்கியது.


(அடுத்த இதழில் முடியும்)

விந்தை உலகம்


ஆழி




ஒருதடவை, நியூயார்க் விமான தளத்தில் ஏராளமான 'ஹெர்ரிங் கல்' பறவைகள் விமானங்களில் மோதி தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தன. அவற்றைக் கொல்ல அதிகாரிகளுக்கு மனமில்லை. பறவையியலறிஞர் ஜான் காட்லிக் என்பவரிடம் இந்த விஷயம் தெரிவிக்கப்பட்டது. அவர், கலைந்து போவதற்கு அந்தப் பறவைகள் எந்த விதமான குரல் கொடுக்குமோ அதை டேப் ரெக்கார்டரில் பதிவு செய்து வந்து அந்த இடத்தில் ஒலிபரப்பினார். அவ்வளவுதான்! அந்தப் பறவைகள் போன இடம் தெரியவில்லை!



உலகில் அதிக காலம் உறங்கும் பிராணி 'மர்மோட்.' வட அமெரிக்காவில் வாழ்கிறது. அது ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் முதல் ஏப்ரல் வரை, சேர்ந்தாற்போல் 7 மாதங்கள் பூமிக்கு அடியில் பதுங்கிக்கொண்டு, பந்து மாதிரி உடலைச் சுருட்டிக் கொண்டு உறக்கத்தில் ஆழ்ந்து விடுகிறது! அதன் உடலில் உள்ள கொழுப்புச் சத்தே உயிர்வாழ்வதற்கு வேண்டிய சக்தியாகப் பயன்படுகிறது!



முதலையின் தாடைகளை எக்காரணத்தினால் அகலமாகத் திறந்தாலும் அதன் கண்களிலிருந்து கண்ணீர் வரும்! முதலை ஒரு பெரிய இரையை விழுங்குவதற்குத் தன் வாயைத்திறக்கும்போது அதற்குக் கண்ணீர் வழியும்! பார்ப்பதற்கு அந்த இரையின் மரணத்திற்கு முதலை கண்ணீர் வடிப்பதுபோலத் தோன்றும்! இதனால்தான் 'முதலைக் கண்ணீர் வடித்தல்' என்னும் சொற்கள் தோன்றின!



ஒரு 'டால்பின்' (கடற்பன்றி) குட்டியுடன் எப்போதும் இரண்டு பெண் டால்பின்களைப் பார்க்க முடியும்! ஒன்று அதன் தாய், மற்றொன்று அதன் செவிலித்தாய். எதிரிகளை விரட்டி குட்டியைப் பாதுகாக்க தாய் டால்பின், மற்றொரு டால்பினைச் செவிலித்தாயாகச் சேர்த்துக்கொள்ளும்!

தேனீக்கள் தங்கள் நாக்கினாலும், உணர் கொம்பினாலும் ருசியை நுகர்கின்றன என்பதுடன் அவை தங்கள் கால்களாலும் ருசியை நுகர்கின்றன என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்!



ஆசனம் போடுங்கள் ஆரோக்கியமாக வாழுங்கள்!

இப்போது உங்களுக்குச் சொல்லித் தரப்போகும் ஆசனத்துக்கு மெழுகு வர்த்தி — காண்டில் — என்று பெயர். சர்வாங்காசனம் என்று கேள்விப்பட்டிருப்பீர்களே! அதுவேதான் இது! ஈர்ப்புச் சக்தியை எதிர்த்துச் செயல்படும் ஆசனம் இது. உடலின் பளுவைத் தோள்கள் தாங்கும்படிச் செய்ய வேண்டும். இதனால் திண்தோள்களைப் பெறலாம். வலுவான தோள்கள் வனப்புக்கு இலக்கணமல்லவா? இந்த ஆசனம் முந்தைய ஆசனங்களை விடக் கொஞ்சம் சிரமமானது. ஆனால் முயன்றால் முடியாதது ஏதுமில்லையல்லவா?

(1) சமதரையில் மல்லாந்த நிலையில் நீட்டிப் படுங்கள். தோள்பட்டை எலும்புகளை இறுக்கிக் கொள்ளுங்கள் — கைகளை உடலோடு பக்கவாட்டில் சேர்த்து கால்களை வளைவு இல்லாமல் நீட்ட வேண்டும் - பாதங்கள் இணைந்த நிலையில்

(2) கைகளால் இடுப்பைத் தாங்கிய படி கால்களை, இணைந்த நிலையிலேயே மெதுவாக மேலே தூக்குங்கள்.

(3) இடுப்பிலுள்ள கைகளின் பிடியை மெள்ள மெள்ள அக்குள் நகர்த்தி, முதுகையும் மேலே எழும்பச்செய்யுங்கள். இப்போது உடலின் பளு முழுவதையும் தோள்பட்டை தாங்கி நிற்கும். கால்களையும் உயர்த்தி விரைப்பாக்கி நிறுத்துங்கள். (ஆசனம் போடும் மணிக்கு இந்த நிலைவர இன்னும் பயிற்சி தேவை!)

(4) மூன்றாவது நிலையில் பத்து எண்ணும் வரை நீடித்துப்பிறகு உயர்த்திய கால்களை மெள்ள மடக்கி முழங்கால்கள் நெற்றியைத் தொடும்படி மடக்குங்கள். இப்போது இடுப்பைப் பற்றி இருந்த கைகள் பக்கவாட்டில் தரையோடிருக்குமாறு நீட்டப்படவேண்டும். (சிறுவன் மணிக்கு இந்த நிலையில் தேர்ச்சி இல்லாததால் அதை விளக்கப் படம் போட்டுக் காட்டியுள்ளது.)

(5) இனி, கழுத்தை வில்லாகவளைத்துச் சற்றே உயர்த்தி. மடக்கிய கால்களைப் பிரித்து நீட்டியபடி மெதுவாகக் கீழே கொண்டு வாருங்கள். தலையைத் தூக்கி விடக்கூடாது.

(6) ஆரம்ப நிலைக்குக் கால்களைத் தரையில் படிய நீட்டுங்கள். உடலைத் தளர் நிலைக்குக் கொண்டு வாருங்கள்.

கால்கள், கழுத்து, இடுப்பு, தோள் ஆகிய பாகங்களுக்கு வலுவூட்டக் கூடியது மெழுகு வர்த்தி **ஆசனம்** - அதாவது சர்வாங்காசனம்.

ஆசனம் போடும் சிறுவன்: மணி
புகைப்படங்கள்: உத்ரா.

உப்போ உப்பு!


'உப்பு இல்லாப் பண்டம் குப்பையிலே' என்பது பழமொழி. சமையலுக்கு ருசி சேர்க்கும் உப்பு அதிகமானால் வாயில் வைக்க முடியாது. உணவில் உப்பை அதிகம் சேர்த்துக் கொண்டால் 'ரத்த அழுத்த நோய்' வரும் என்று சொல்கிறார்கள்.

உப்பின் ஏழுவகை உண்டு. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குணம் உண்டு.


(1) அட்டுப்பு: பித்தம், குத்தல், வாந்தி குணமடையும், (2)கறிஉப்பு: பசியை உண்டாக்கி திரடைப்பு, அஜீரணம் சுகமாக்கும், (3) கம்பி உப்பு: நீர் கருக்கு, சாதாரண வாதபித்தம் நீங்கும்' (4) வளையல் உப்பு: சுரம், இசிவுப்பு, வயிற்றுவலி குணமாகும். (5) இந்துப்பு: நரம்புச் சிலந்தி விஷம், தலை, கண், காது, கழுத்து முதலிய நோய்களைக் கண்டிக்குமாம். (6) கல்உப்பு: வாத நோய், கபம், உஷ்ணவாயு, நாவறட்சி நீங்கும், (7) சுந்தி உப்பு: குடல் சம்பந்த நோயையும், வாத ரோகத்தையும் போக்கும்.


உப்பளத்திலுள்ள நல்ல உப்பு: உஷ்ணவாதம், உடலில் ஏற்படும் கட்டி முதலிய நோய்களைப் போக்கும்.


தொகுப்பு: பொன்மலைபரிமளம்



1


2


3


4


5


6



தெரியுமா?

2976 ராயல் அகாதமி லண்டனில் எங்குள்ளது?

2977 மான்ஸ்ட்ரன்ஸ் (Monstrance) என்றால் என்ன?

2978 இங்கிலாந்தின் மிகப்பெரிய ஏரியின் பெயர் என்ன?

2979 மாண்டிரோஸா (Monte Rosa) என்பது என்ன?

2980 ஒரு விளையாட்டில் நீங்கள் ஒரு 'கேனன்' (Cannon) பெற்றீர்களானால் அது எந்த விளையாட்டாக இருக்கும்?

2981 தாமஸ் பெக்கட் கொலை செய்யப்பட்டது எந்தக் கதீட்ரலில்?

2982 சூயஸ் கால்வாய் இணைக்கும் இரு கடல்கள் எவை?

2983 கல்லிங்ஹாம் கல் (Colling-ham Stone) எங்குள்ளது?

2984 அன்னப்பறவை ஆறு எந்த நாட்டிலுள்ளது?

2985 நீர் அடையாளங்கள் (Water Mark) என்பது என்ன?

2986 இரண்டாவது உலகப் போரின் போது அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர் யார்?

2987 எல்ஜின் சலவைக் கற்களை (Elgin Marbles) லண்டனில் எங்கு காணலாம்?

2988 ஸ்வீடனின் தலைநகரம் எது?

2989 லஸ்கார் (Lascer) என்றால் என்ன?

2990 அகாதா கிறிஸ்டியின் நாடகமொன்று லண்டனில் 23 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து கொண்டிருக்கிறது. அதன் பெயர் தெரியுமா?

2991 நான்காம் ஜார்ஜுக்குப்பிறகு இங்கிலாந்தின் அரியணையில் அமர்ந்த அரசரின் பெயர் என்ன?

2992 பொதுவாகக் கிரிக்கெட் மட்டைகளை எந்த மரத்தைக் கொண்டு உருவாக்குவார்கள்?

2993 டிடிகாகா ஏரி எந்த நாட்டிலுள்ளது?

2994 நீங்கள் அனிமாமீடர் என்ற கருவியைப் பயன்படுத்த நேர்ந்தால் எதைக் கணக்கிடுவதாகக் கொள்ளலாம்?

2995 பால்ஸாக் என்ற எழுத்தாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

2996 கெய்ரோ எதன் தலைநகரம்?

2997 நம் பாரதத்தில் ஜனாதிபதி ஆட்சி எத்தனை ஆண்டுகள் நீடிக்கலாம்?

2998 பாரதத்தின் புதிய அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் செய்யப்பட்டது எப்போது?

2999 (ப்ளூ புக்) நீலப்புத்தகம் என்பது என்ன?

3000 மாட்டின் கொம்புகள் என்பது என்ன?

3001 பசுவின் கொம்பிலுள்ள வளையங்கள் எதைக் குறிக்கின்றன?


3002 கனரக வண்டிகளில் பெட்ரோலைவிட டீசலைப் பயன்படுத்துவதற்கான காரணம் என்ன?

3003 பறவைகள் ஏன் எப்போதும் எதையாவது கொறித்தபடி இருக்கின்றன?

தெரியுமே!

2976. பர்லிங்டன் வீதியில். 2977. ரோமன் கத்தோலிக்க சர்ச்சில் பயன்படும் ஒரு புனிதமான பாத்திரம். 2978. விண்டர்மெயர் (Windermere) 2979. இத்தாலி ஸ்விஸ் எல்லையிலுள்ள பெனைன் ஆல்ப்ஸ் மலைத்தொடருக்கு இப்பெயர். 2980. பில்லியர்ட்ஸ். 2981. காண்டர்பரி கதீட்ரலில். 2982. மத்திய தரைக்கடல், செங்கடல். 2983. இங்கிலாந்திலுள்ள யார்க்ஷயரில். 2984. மேற்கு ஆஸ்திரேலியாவில் உற்பத்தியாகும் போது இதன் பெயர் அவான். 2985. காகித உற்பத்தியில் காகிதங்களில் இடப்படும் ஒருவகை அடையாளங்களுக்கு இப்பெயர். 2986. ஃபிராங்ளின் டி ரூஸ்வெல்ட். 2987. பிரிட்டிஷ் மியூஸியத்தில். 2988. ஸ்டாக்ஹோம். 2989. இந்திய மாலுமிக்கு இப்பெயர். 2990. எலிப்பொறி — மௌஸ்டிராப் —என்று பெயர். 2991. நான்காவது வில்லியம். 2992. வில்லோ மரத்திலிருந்து. 2993. ஒரு பகுதி பெருவிலும் மற்றொரு பகுதி பொலிவியாவிலும். 2994. காற்றின் வேகத்தை. 2995 பிரெஞ்சு தேசத்தை. 2996. எகிப்தின் தலைநகர். 2997. மூன்று ஆண்டுகள். 2998. முதல் திருத்தம் 1951ல் செய்யப்பட்டது. 2999. ஐப்பானிய அரசின் அதிகார பூர்வமான அறிக்கைக்கு ப்ளூபுக் என்று பெயர். 3000. எலும்புகளின் வெளிப்பாடு. 3001. அது ஈன்றுள்ள கன்றுகளின் எண்ணிக்கையை. 3002. டீசலின் 40 சதவீத எரி உஷ்ணமே வண்டியை இழுக்கப் போதுமான சக்தியைக் கொடுப்பதால். 3003. பறவைகளின் உடல் உஷ்ணம் எப்போதும் ஒரே நிலையில் (105 டிகிரி ஃபாரன்ஹீட்) இருக்க வேண்டும். அவை எப்போதும் எதையாவது தின்று கொண்டிருந்தாலே இது சாத்தியம்.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600032.
Editor: K. R. Athmanathan.
GOKULAM FORTNIGHTLY, GUINDY, MADRAS-600032.



வெங்கடேசப் பெருமானுக்கு ஊஞ்சல் சேவை

நிர்குணனும் நிமலனுமான எம்பெருமான் இவ்வுலகின் அவஸ்தைகளுக்கு அப்பாற்பட்டவர். ஆனாலும் பக்தர்கள் ஆண்டவனைத் தங்களைப் போலவே, தங்களில் ஒருவராகவே எண்ணுகிறார்கள். ஆகவே வெங்கடேசப் பெருமானுக்கு ஓய்வும் உல்லாசமும் வேண்டுமென்று விரும்புகின்றனர் பக்தர்கள். அவன் களிப்பதைக் கற்பனைக்கண் கொண்டு பார்த்துப் பரவசப்படுகின்றனர். எம்பெருமானுக்கு நிரந்தரமான சுகசௌக்கியங்களை அளிக்கத் தவிப்போடும் காத்திருக்கின்றனர்.

எம்பெருமானுக்கான ஊஞ்சல் சேவையின் தாத்பரியம் இதுவே. பிரதி தினமும் மாலை ஆறுமணியளவில் திருமலையில் அயன மஹாலில் ஊஞ்சல் சேவை நடைபெறுகிறது. உத்ஸவமூர்த்தி தமது தேவியருடன் அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சலில் அமர்த்தப்படுகிறார். கந்த சாமர உபசாரங்கள் உலகளந்தவருக்கு உவப்பாக அளிக்கப்படுகின்றன. வேதபாராயணம், இன்னிசையினூடே பொன்னூஞ்சல் மெதுவாக ஆட்டப்படும்.

வெங்கடேசப் பெருமானின் இந்தக் கண்கொள்ளாக் காட்சியான ஊஞ்சல் சேவையில் கிரஹஸ்தர்களும் பங்கு பெறலாம். இதற்காக ரூ. 1000 — கொடுத்து டிக்கெட் பெற வேண்டும். ஆறுபேர்கள் இந்தத் தரிசனத்துக்கு அனுமதிக்கப் படுவார்கள். ஊஞ்சல் சேவையில் பங்கு பெறும் கிருஹஸ்தர்களுக்கு ரூ. 250 - பெறுமானமுள்ள ஒரு டாலரும் வஸ்திர பஹுமானமும் பிரசாதமாக வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு

எக்ஸிகியூடிவ் ஆபீஸர்

திருமலை திருப்பதி தேவஸ்தானங்கள்

திருப்பதி

(சித்தூர் ஜில்லா, ஆந்திரப்பிரதேசம்)

Registered No. M 9040